# කාර්ය සාධන වාර්තාව - 2012

# වනජීවී සංරක්ෂණ දෙපාර්තමේන්තුව

# செயலாற்றுகை அறிக்கை 2012

# வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

# Performance Report – 2012

# Department of Wildlife Conservation








# அறிமுகம்

இலங்கையின் பதிலிட முடியாத சுதேச தாவர விலங்கினங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் பாதுகாத்தல் தேசிய முன்னுரிமைகளிலொன்றாகும். வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் நாட்டின் முழு நில மற்றும் கடல் ஆள்புலத்தின்மீது வனசீவராசி வளங்களை பாதுகாப்பதற்கு பொறுப்பான பிரதான அரச நிறுவனமாகும். இது நாட்டின் வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கான(WLPAs) வலையமைப்பை தாபிப்பதற்கும் முகாமை செய்வதற்குமான சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது. இது தற்போது 8500சதுர கிமீ மொத்த இடப்பரப்பை விஞ்சியுள்ளது. இது இலங்கையின் நிலப்பரப்பின் 13% ஆகும். பின்வரும் அட்டவணை வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளின் வகுதிகளையும் அளவுகளினையும் விபரிக்கின்றது. தற்போதைய வனசீவராசிப் பாதுகாப்புப் பிரதேசங்களின் வலையமைப்பு தொடர்பான முழுமையான விளக்கத்தை இணைப்பு 01 இல் காண முடியும்.

| **பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளின் வகுதி** | | **நாளதுவரை பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு இடப்பரப்புக்களின் இல.** |
|---|---|---|
| தேசிய ஒதுக்குகள் | கண்டிப்பான தேசிய ஒதுக்கு | 03 |
| | தேசிய பூங்கா | 22 |
| | இயற்கை ஒதுக்கு | 05 |
| | காட்டு நடைபாதை | 01 |
| **மொத்தம்** | | **31** |
| சரணாலயங்கள் | | 65 |
| **கூட்டுமொத்தம்** | | **96** |

பல்வகை உயிரியல் வளங்களை அவற்றின் இயற்கையான வாழிடங்களுடன் சேர்த்து பேணுதற்கு புறம்பாக வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளின் வலையமைப்பு விவசாயம் மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக நீரை வழங்குகின்ற நாட்டின் பெரிய அளவிலான நீர்ஒதுக்குகள் எல்லாவற்றினையும் பேணுகின்றது. 1950ஆம் ஆண்டிலிருந்து சேனநாயக சமுத்திரம், எல்லா மகாவலி நீர்த்தேக்கங்கள் மற்றும் மத்திய, வடமத்திய மாகாணங்களில் மகாவலி நீர் வழங்கப்படுவன உள்ளடங்கலாக கல்லோயா பள்ளத்தாக்கிலுள்ள எல்லா நீர்த்தேக்கங்கள் உடவளவ, மவ் அற, லுணுகம்வெகெர மற்றும் வெகெறகல உள்ளடங்கலாக நாட்டின் தென் பகுதியிலுள்ள எல்லா நீர்த்தேக்கங்களும் வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புக்களின் வலையமைப்பினுள் அவற்றின் நீரேந்து இடப்பரப்புகளுடன் சேர்த்து பாதுகாக்கப்படுகின்றன. வனசீவராசிகள் பாதுகாப்பு இடப்பரப்பினுள் விவசாயம் மற்றும் நீர் மின்வலு பிறப்பாக்கத்திற்காக நீரை வழங்குகின்ற நீர்ஒதுக்குகளின் மொத்த எண்ணிக்கை 40 இனை விட அதிகமாகும்.

இலங்கையின் பிரதான ஆறுகளின் மேல் நீரேந்து பகுதிகள் அதாவது மகாவலி, களு, களனி மற்றும் வளவை ஊடாக பீக் வனாந்தர தேசிய ஒதுக்கு மற்றும் ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா போன்ற வனசீவராசி ஒதுக்கங்களினுள் வருகின்றது.

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் இலங்கையின் மிக பெறுமதி வாய்ந்தனவான வளங்களையும் இயற்கை சூழலையும் அனுபவிக்கும் உரிமைக் காலத்தை கொண்டு அதன் தொலைநோக்கங்களால் வழிநடத்தப்பட்டு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியை பயன்படுத்தி வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் உயர்தொழில்சார் முகாமைத்துவத்திற்கும் பேணலிற்குமான பொறுப்பை ஏற்கின்றது.

**தொலை நோக்கு:** தற்போதைய மற்றும் எதிர்காலப் பரம்பரைக்காக வனசீவராசி மரபுரிமையை பேணுதல்

**செயற்பணி:** வனசீவராசி மரபுரிமையை தொழில் ரீதியான முகாமைத்துவத்தினூடாக பேணுவதை உறுதி செய்வதற்காக ஏனையவர்களுடன் சேர்ந்து பணியாற்றுதல்

இலங்கை தேசிய வனசீவராசிகள் கொள்கையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய தேசிய மற்றும் சர்வதேச நியமங்களின் உபாயங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்றவாறு நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு மிகப்பெரிய அளவில் பங்களிப்பை வழங்குகின்ற வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகள் முகாமை செய்யப்படுகின்றன.

தீர்மானம் எடுப்பதில் விஞ்ஞானம், வினைத்திறனுள்ள தொடர்பாடல் மற்றும் சிக்கலான தரவு மற்றும் தகவல் முகாமை செய்தல், சமமான பேணல் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு வழிகாட்ட நீணடகாலத் திட்டங்கள், பார்வையாளர்களுக்கான பல்வகையான பொழுதுபோக்கு மற்றும் கல்விக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் பங்குபற்றல் மற்றும் பயன்களைப் பங்கீடு செய்வதனூடாக உள்ளூர் சமூகத்தை இணைத்தல் என்பனவற்றை பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு முகாமைத்துவத்தின் தற்போதைய பூகோள நோக்கு வலியுறுத்துகிறது.

தற்போது வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தனது செயற்பாடுகளை பல வடிவங்களில் மேம்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

- பொருத்தமான தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளுக்கு ஏற்ப வனசீவராசி வளங்களை பேணுவதற்கு தேசிய உபாய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்திசெய்தல்.
- வனசீவராசிகளின் தொகை உயிர்வாழ்வை உறுதிப்படுத்த அவசியமானவிடத்து விசேட அறிவியல் அக்கறையுள்ள தளங்கள் உள்ளடங்கலாக எல்லா சூழல் முறைமையின் மாதிரிகளை பாதுகாப்பதற்கு பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளை விரிவாக்கலும் இணைத்தலும்.
- பொருத்தமான விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் எல்லா பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளையும் இனங்காணலும் வகைப்படுத்தலும் முகாமை செய்தலும் ஒவ்வொரு பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளின் நிலைமைகளினை பின்னர் கண்காணித்தலும்.
- அருகிவரும் உயிரினங்களுக்கான மீளப்பெறல் திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

- சம்பந்தப்பட்ட சூழல் முறைமையினை பாதுகாப்பதனை கருத்திற்கொண்டு பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் உல்லாசபயணத்துறைக்கு வசதிசெய்தல்.
- வனசீவராசிகளின் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளின் உள்ளேயும் வெளியேயும் வனசீவராசி வளங்களின் சட்டரீதியற்ற மோசடிகளை குறைப்பதற்காக தாவர விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினையும் மற்றும் வேறு ஒழுங்குவிதிகளினையும் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தல்
- இலங்கையின் வனசீவராசி வளங்களின் முகாமைக்காக இயைபான அறிவியல் ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்தல்
- பயிற்சி, ஊக்கப்டுத்தல், தூண்டுதலை வழங்குவதனூடாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாட்டொகுதியின் இயலளவினை வலுப்படுத்தல்
- பொது கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்களினூடாக பாதுகாப்பினை மேம்படுத்தல்
- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு மூலங்கள் மீதான தங்கியிருத்தலைக் குறைப்பதற்காக பேணல் செயற்பாடுகளில் பொதுமக்களின் பங்களிப்பினை ஊக்கப்படுத்தலும் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளை சூழவுள்ள இடப்பரப்புகளில் வாழ்கின்ற சமுகத்தினரின் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதில் அவர்களுக்கு உதவுதலும்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தலைமை அலுவலக மட்டத்தில் எட்டு தொழில்நுட்ப பிரிவுகளின்கீழ் செயற்படுகின்றது. அவை திட்டமிடல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பிரிவுகள், தேசிய மூலவள முகாமைத்துவம், யானை பாதுகாப்பு, பார்வையாளர் சூழல் சார்ந்த உல்லாச பயணத்துறையும் சமுதாய சேவைகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி, பாதுகாப்பு சட்டஅமுல்படுத்தல் மற்றும் வனசீவராசிகள் ஆரோக்கியம் என்பனவாகும். மேலதிகமாக நிதி பிரிவு நிர்வாக பிரிவு மற்றும் எந்திரவியல் பிரிவு என்பன திணைக்கள தொழில்நுட்ப பிரிவுகளின் ஆதரவளிக்கும் கடமைகளை புரிகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட பிரிவுகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் 1 தொடக்கம் 11 வரையான அத்தியாயங்களில் தரப்பட்டுள்ளன.

மத்திய, கிழக்கு, மகாவலி, வடமேற்கு, தெற்கு, மேற்கு,யால-புந்தல ஆகிய 07 வனசீவராசிகள் பிராந்தியங்களும் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் செயற்பாட்டுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தின. 2012 ஜூலை 16 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பிராந்திய எல்லைகள் மீள்நிர்ணயம் செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை நாடு முழுவதிலும் பலப்படுத்தும் நோக்கில் மத்திய, வடமேற்கு, தெற்கு, மேற்கு, அநுராதபுரம்,பொலனறுவை, ஊவா, அம்பாறை, வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய 11 வனசீவராசிகள் பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டன. இந்த பிராந்தியங்களின் கீழ் வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகள் பாதுகாப்பு குறிக்கோளையும் அபிவிருத்தி இலக்குகளையும் அடைவதற்காக முகாமை செய்யப்பட்டன. பின்னிணைப்பு 01 வனசீவராசிகள் பிராந்தியங்களின் தற்போதைய அமைப்பு தொடர்பான விளக்கங்களைக் காட்டுகின்றது.

நாட்டின் வனசீவராசிகள் வளங்களின் உயர்தொழில் முகாமைக்காக வனசீவராசிகள் உத்தியோகத்தர்களின் அறிவையும் திறன்களையும் மேம்படுத்தி அவர்களின் மனப்பாங்கை வடிவமைப்பதற்காக கிறித்தலையிலுள்ள தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடர்ந்தும் வழமையான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியது.

ஆண்டின் நடவடிக்கை திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டில் திரட்டுநிதியத்திலிருந்து 1131.3 மில்லியன் ரூபா பெறப்பட்டது. மேலும், வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியம், களு கங்கை - மொறகஹகந்த விவசாய அபிவிருத்தி-ச் செயற்திட்டம் என்பவற்றின் மூலம் கிடைத்த நிதிகளும் தனிப்பட்ட நன்கொடை வழங்குநர்கள் மற்றும் நடைகொடை முகவர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகளும் திட்டமிடப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகளுக்காக விடுவிக்கப்பட்டன.

ஆண்டிறுதி கணக்கு நல்ல நிதிசார் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. மீண்டெழும் செலவினம் 100%, மூலதன செலவினம் 65% (இணைப்பு 2)

## அத்தியாயம் - 1

## திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவு

### 1.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கான வருடாந்த நடவடிக்கைத் திட்டங்களை தயாரித்தல்
- விசேட அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக கருத்திட்ட முன்மொழிவினை தயார்செய்தல்.
- வருடாந்த நடவடிக்கை திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் முன்னேற்றங்களை கண்காணித்தல்.
- மாதாந்த, காலாண்டு, வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை தயார்செய்தல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயார்செய்தல்.
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் www.dwc.gov.lk இணைய தளத்தினை புதுப்பித்தலும், நிருவகித்தலும்
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நாடு முழுவதிலுமான வானொலி தொடர்பாடல் முறைமையினை கண்காணித்தலும், தரமுயர்த்தலும் பேணலும்.
- PABX இனை கண்காணித்தலும் தரமுயர்த்தலும் பேணலும்.
- வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பரந்த வலைப்பின்னலை (WAN) நிருவகித்தலும் பேணுதலும்.
- தேசிய பூங்காக்களை தன்னியக்கமாக்கல்.
- GIS அலகினை நிருவகித்தல்.

### 1.2 செயலாற்றுகை 2012

2012 ஆம் ஆண்டின் போது பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- **நடவடிக்கைத் திட்டத்தினை தயார்செய்தல்**
  2013 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் நடவடிக்கைத் திட்டம் உள்ளடங்கலாக வேலை நிகழ்ச்சித்திட்டம் தயார்செய்யப்பட்டு வனசீவராசிகள் அமைச்சிடம் சமர்பிக்கப்பட்டது.

- **முன்னேற்ற அறிக்கைப்படுத்தல்**
  "கஜமிதுரோ, யானைப் பாதுகாப்புச் செயற்திட்ம், லுணுகம்வெஹர, ஹொரவப்பத்தானை ஆகிய காட்டு யானைகள் பாதுகாப்பு பூங்காக்களை அமைத்தல், தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழான அமுலாக்கற் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் நேர அட்டவணைக்கு இணங்க கமத்தொழில் சேவைகள், வனசீவராசிகள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டன. தேவைக்கு இணங்கவும் வேண்டுகோளின் அடிப்படையிலும் முன்னேற்ற அறிக்கைகள் பல்வேறு வேறு நிறுவனங்களுக்கு சமர்பிக்கப்பட்டன

- **செயலாற்றுகை அறிக்கையினை தயார்செய்தல்**

  2011 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, நடவடிக்கைத்திட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்பு செயற்பாடுகளின் விளைவு மீதான தரவு மற்றும் தகவலை பயன்படுத்தி தொகுக்கப்பட்டது.

- **விசேட கருத்திட்ட முன்மொழிவுகளை தயார்செய்தல்**

  திட்டமிடல் மற்றும் தகவல் மொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவினால் தயார்செய்யப்பட்ட பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் விசேட பேணல் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் மீதான கருத்திட்ட முன்மொழிவுகள் திறைசேரிக்கு மற்றும் /அல்லது வேறு நிதியிடும் முகவரகங்களுக்கு அனுப்பப்பட்டன. பின்வரும் விசேட கருத்திட்ட முன்மொழிவுகள் (அட்டவணை 1.1) நிதியிடலுக்காக தகமை பெற்றள்ளதுடன் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் 2012 ஆம் ஆண்டில் இவ் முன்மொழிவுகளுக்காக நிதிகளைப் பெறவேண்டியிருக்கிறது.

**அட்டவணை 1.1** நிதியிடலுக்கு தகைமை பெற்ற விசேட கருத்திட்டமுன்மொழிவுகள்

| முன்மொழிவின் பெயர் | மொத்த கருத்திட்ட செலவு (ரூபா. மில்லியன்) | 2012இல் பெறவுள்ள நிதிகள் (ரூபா. மில்லியன்) | நிதி மூலங்கள் |
|---|---|---|---|
| மின்சார வேலி நிர்மாணம் | 100.00 | 100.00 | திரட்டு நிதியம் |
| ஹொரவப்பத்தானை, லுணுகம்வெஹர ஆகிய இடங்களில் யானைப் பாதுகாப்புப் பூங்காக்களை நிறுவுதல் | 835.00 | 100.00 | திரட்டு நிதியம் |
| தயட்டகிருள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 100.00 | 100.00 | திரட்டு நிதியம் |

- **வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பரந்த இடப்பரப்பிலான வலையமைப்பை நிருவகித்தல்** (DWC WAN)

தற்போதுள்ள கணனி வலையமைப்பு திட்டமிடற்பிரிவின் பணியாட்டொகுதியினரால் வருடம் முழுவதும் பேணப்பட்டு நிருவகிக்கப்பட்டன. இத்தகைய செயற்பாடுகள் கணனிகள் மற்றும் துணையுறுப்புகளை திருத்துதல் WAN வலையமைப்பின் கோளாறுகளைக் கண்டுபிடித்தல் புதிய வன்பொருட்களையும் மென்பொருட்களையும் பொருத்துவதன் மூலம் கணனிகளைத் தரமுயர்த்தல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன

ஹோட்டன் சமவெளி, வில்பத்து தேசிய பூங்கா ஆகிய இடங்களில் நுழைவுச் சீட்டு வழங்கும் முறையைத் தன்னியக்கமயப்படுத்தும் பணி பூர்த்தியடைந்துள்ளது.

- **வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் இணைய தளத்தினை நிருவகித்தல்**:www.dwc.gov.lk

வனசீவராசிகள் திணைக்களத்தின் தற்போதுள்ள இணையத் தளம் தரவுகளையும் தகவல்களையும் ஒன்றிணைப்பதன் மூலம் கல்வி மற்றும் ஆய்வுப் பெறுமானம் கொண்டதாக கல்விசார் மற்றும் ஆராய்ச்சி பெறுமதி தொடர்ச்சியாக நாளதுவரைப்படுத்தப்பட்டது. முழு செய்முறையும் திட்டமிடல் பிரிவின் பணியாட்டொகுதியினரால் நிறைவேற்றப்பட்டன.

- **வானொலி தொடர்பாடல் வலையமைப்பு**

வானொலி தொடர்பாடல் முறைமையின் வீச்சினை விருத்தி செய்யவும் தடங்கலற்ற தொடர்பு ஏற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்குமாக தேவையான அபிவிருத்திகளும் தரமேம்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய எல்லா செயற்பாடுகளின் தொழிற்பாட்டுப் பகுதி, திட்டமிடல் பிரிவிற்கு இணைக்கப்பட்ட வானொலி தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்களால் நிறைவேற்றப்பட்டன.

- GIS **அலகின் நிர்வாகம்**

களத்தில் சேகரிக்கப்பட்ட GPS தரவை பயன்படுத்தி பின்வரும் நோக்கங்களுக்காகவும் விடயங்களுக்காகவும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

  - தற்போதுள்ளனவும் முன்மொழியப்பட்டதுமான மின்வேலிகள்
  - புதிய வனசீவராசிகள் நிர்வாக எல்லைகள்
  - புதிய உத்தேச யானைப் பாதுகாப்புப் பிரதேசங்களும் முகாமைசெய்யப்படும் உத்தேச யானை ஒதுக்கங்களும்
  - மதுகங்கை மற்றும் அகுரல சரணாலயங்கள்

மேலும், தலைமை அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளினதும் கள அலுவலகங்களினதும் வேண்டுகோளின் பேரில் குறித்த விடயம் தொடர்பான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

- 2012 **ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றம்**

2012 ஆம் ஆண்டில் திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கை திட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை அட்டவணை 1.2 காட்டுகின்றது.

**அட்டவணை 1.2** 2012 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ.இல | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். (ரூபா. '000) |
|---|---|---|---|
| 1 | தேசிய பூங்காவினை தன்னியக்கமாக்குதல் தற்போதைய முறைமையை மேம்படுத்துதல் HP NP இற்காக மடிக் கணனியொன்றைக் கொள்வனவு செய்தல். | மேம்படுத்தும் பணி நடைபெறுகின்றது. மடிக் கணனியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. | 107 |
| 2 | தலைமையகத்திற்காக மட்டும் (50)தொலைபேசி அலகுகளைக் கொள்வனவு செய்தல் | 25 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டது | 186 |
| 3 | வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்கள WAN வலையமைப்பின் கணனிகளை நவீனமயப்படுத்தி மேம்படுத்துதல் | பூர்த்தி செய்யப்பட்டது | 536 |
| 4 | மேசைக் கணனிகள் (02), அச்சுப்பொறிகள்,யூபீஎஸ்கள் | 02 கணனிகள், 02 | 220 |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்தல். | அச்சுப்பொறிகள், 02 யூபீஎஸ்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | |
| 5 | வான் அலைத் தொடர்பாடல் தொகுதியைப் பராமரித்தலும் தொடர்பாடல் உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்தலும். | தொடர்ச்சியாகப் பராமரிக்கப்பட்டது. SLTI நிலையான ஆதன முகாமை முறைமை கொள்வனவு செய்யப்பட்டது. | 71 |
| 6 | வான் அலைத் தொடர்பாடல் முறைக்கான பற்றறிகள் கொள்வனவு (100 பற்றறிகள்) | 50 துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டது | 307 |
| **மொத்தம்** | | | **1427** |

# அத்தியாயம் – 2

# இயற்கை வள முகாமைப் பிரிவு

## 2.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளுக்கான முகாமைத் திட்டங்களை தயாரித்தலும் மீளாய்வு செய்தலும்
- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளுக்காக மூலவள பொருட் பட்டியல்களை தயாரித்தலும் மீளாய்தலும்
- பாதுகாக்கப்பட்ட பிரதேச வலையமைப்பை மீளாய் செய்தலும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தலும்
- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் எல்லைகளை அளவீடு செய்து குறித்தல்
- வனசீவராசிகள் வள முகாமைத்துவம் நீர் மூலவளங்கள் மற்றும் புல்வெளி முகாமைத்துவத்திற்கான கொள்கையை மீளாய்வு செய்தல், கண்காணித்தல் மற்றும் வகுத்தமைத்தல்
- முற்றுகையிடும் உயிரின கட்டுப்பாட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்
- நெருப் பட்டைகளினதும் வனசீவராசிகள் வாழ்விடப் பகுதிகளினதும் முகாமை
- மாசடைதல் கட்டுப்பாடு மற்றும் சிறப்பினங்களை மீளப்பெறுகின்ற திட்டங்களை இணைத்தலும் கண்காணித்தலும்
- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் முன்மொழியப்பட்ட செயற்பாடுகளின் அபிவிருத்திக்கான சூழல் தாக்க மதிப்பீட்டினை நடாத்துதல்.
- நாட்டின் அபிவிருத்தி கருத்திட்டங்களின் சூழல் தாக்க மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பங்குபற்றுதல்
- இலங்கையில் றம்சார் சமாவாயத்தின் நிர்வாக அதிகாரியாகச் செயற்படுதல்

## 2.2. பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பு வலையமைப்பிளைத் தாபித்தல்

- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் வலையமைப்பை பலப்படுத்துவதற்காக நில அளவையும் எல்லை நிர்ணயமும் அட்டவணை 2.1 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயித்தல் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை காட்டுகின்றது
- பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் எல்லைகள் வழியே சைகைப் பலகைகள் தயாரிக்கப்பட்டு நிறுவப்பட்டன. அட்டவணை 2.2 பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் தாபிக்கப்பட்ட சைகைப் பலகைகளின் விபரங்களை காட்டுகின்றது.

**அட்டவணை 2.1:** 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயங்கள்

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் | மொத்த நீளம் கம்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அநுராதபுரம் | வில்பத்து தேசிய பூங்காவின் கிழக்கு எல்லை | 13 கிமீ (129 கம்பங்கள்) |
| கிழக்கு | பாணம-குடும்பிகல சரணாலயம் | 13 கிமீ (129 கம்பங்கள்) |
| | கல்ஓயா தேசிய பூங்கா | 100 கம்பங்கள் |
| பொலன்னறுவை | சோமாவதிய தேசிய பூங்கா | 600 கம்பங்கள் |
| | மாதுருஓயா தேசிய பூங்கா | 121 எல்லைக் கம்பங்கள் |
| மேற்கு | மதுகங்கை சரணாலயம் | 3 கிமீ |
| மத்திய | VRR சரணாலயம் | 151 கம்பங்கள் |
| | ஹக்கலை சரணாலயம் | 121 கம்பங்கள் |

**அட்டவணை 2.2:** 2012 ஆம் ஆண்டில் சைகைப் பலகைகளின் தாபிப்பு/புனரமைப்பு

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாப்புப் பிரதேச அலுவலகத்தின் பெயர் | பலகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கிழக்கு | குமண தேசிய பூங்கா | 07 |
| | பாணமம-குடும்பிகல-சரணாலயம் | 16 |
| மேற்கு | ஹொரகொல்லை தேசிய பூங்கா | 12 (புனரமைக்கப்பட்டன) |
| | ஹொரகொல்லை தேசிய பூங்கா | 02 (நிறுவப்பட்டன) |
| | முத்துராஜவெல சரணாலயம் | 12 |
| | ஸ்ரீ ஜயவர்த்தனர சரணாலயம் | 5 |
| | பிராந்திய அலுவலகம்-மேற்கு | 1 |
| | மதுகங்க | 1 |
| அநுராதபுரம் | மிஹந்தலை சரணாலயம் | 4'x2' - 04<br>10'x15' - 01 |
| ஊவா | பிராந்திய அலுவலகம் (ஊவா) | 01 |
| பொலன்னறுவை | புறாத் தீவு | 03 |
| | பிராந்திய அலுவலகம் (பொலனறுவை) | 01 |
| மத்திய | VRR சரணாலயம் | 16 |
| | பிராந்திய அலுவலகம் (மத்திய) | 01 |
| | உணகொல்லை | 05 |
| | கல்வே நிலம் | 09 |
| | ஹக்கலை | 02 |
| தெற்கு | உஸ்ஸன்கொடை தேசிய பூங்கா | 01 |
| | பிராந்திய அலுவலகம் (தெற்கு) | 01 |
| | ETH உடவளவை | 03 |

## 2.3. வனசீவராசிகளுக்கான வாழ்விட வளப்படுத்தல்

முற்றுகையிடும் உயிரினங்களை அகற்றுதல், புல்தரையினை முகாமை செய்தல் மற்றும் தீ தடையினை பேணல் என்பன வாழிடங்களை வளமாக்கலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் ஆகும். அட்டவணை 2.3, 2.4, 2.5 மற்றும் 2.7 என்பன 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாழிடங்களை வளமாக்கல் செயற்பாடுகளின் விபரத்தினை காட்டுகின்றது

**அட்டவணை 2.3** 2012 ஆம் ஆண்டில்; வனசீவராசிகள் பிராந்தியங்களின் புல்தரைகளை முகாமை செய்தல்

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் | பரப்பு (ஹெக்) |
|---|---|---|
| மேற்கு | ஹொரகொல்லை தேசிய பூங்கா | 1/12 ஹெக்டயர் (பராமரிக்கப்பட்டது) |
| | ஹொரகொல்லை தேசிய பூங்கா | 1/5 ஹெக்டயர் (நிறுவப்பட்டது) |

**அட்டவணை 2.4** 2012 ஆம் ஆண்டில் ஆக்கிரப்பு இனங்களை அகற்றுதல்

| வனசீவராசிகள் பிராந்தியம் | சரணாலயம்/பூங்கா | பரப்பு (ஹெக்/ஏக்) |
|---|---|---|
| கிழக்கு | குமண தேசிய பூங்கா வீதியின் இருமருங்கிலும் காணப்படும் ஆக்கிரமிப்பு இனத் தாவரங்களை அகற்றுதல் | 30.13 ஹெக்டயர் |
| அநுராதபுரம் | தப்போவ சரணாலயத்தில் யூகலிப்டஸ் அகற்றுதல் | 138’x74’ மரங்கள் - 20 |
| | தப்போவ சரணாலயத்தில் புரொபிஸ் ஜுலிஃபுளோரா அகற்றுதல் | 21 ஹெக்டயர் |
| ஊவா | யால தேசிய பூங்காவில் லன்ரானா எஸ்பி அகற்றுதல் | 01 ஹெக்டயர் |
| மேற்கு | பெல்லன்வில அத்திடிய சரணாலயத்தில் அனொனா எஸ்பீ அகற்றுதல் | 2.5 ஹெக்டயர் |
| தெற்கு | உடவளவை தேசிய பூங்காவில் லன்ரானா எஸ்பி அகற்றுதல் | 62.5 ஹெக்டயர் |
| கிழக்கு | லாஹுகலை தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுதல் | 08 ஏக்கர் |

**அட்டவணை 2.5** தீப் பட்டை பராமரிப்பு 2012

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் | பரப்பு (ஹெக்/கிமீ) |
|---|---|---|
| மத்திய | VRR சரணாலயம்,கீர்த்தி பண்டாரபுர | 03 ஹெக்டயர் |
| | VRR சரணாலயம் உணகொல்லை | 04 ஹெக்டயர் |
| தெற்கு | உடவளவை | 30 கிமீ |

**அட்டவணை 2.6** மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் 2012

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் | தொகை (மரங்களின் எண்ணிக்கை) |
|---|---|---|
| கிழக்கு | பாகுர ஏரி குமண தேசிய பூங்கா | 1500 |
| | குமண-வில்லுவ-குமண தேசிய பூங்கா | 1500 |
| பொலன்னறுவை | வஸ்கமுவை தே.பூ | 01 ஹெக்டயர் (156 மரங்கள்) தொகை |
| மேற்கு | கஹபொல ரிதீகல தோட்டம் | 100 |

**அட்டவணை 2.7** புதிய நீர் நிலைகளின் நிர்மாணம் -2012

| வனசீவராசிகள் பிராந்தியம் | பாதுகாக்கப்பட்ட பிரதேசம் | தொகை (எண்ணிக்கை) |
|---|---|---|
| கிழக்கு | குமண தேசிய பூங்காவின் உள்ளே | 04 |

## **2.4** மொறகஹகந்த கருத்திட்டத்தின் கீழான வனசீவராசிகள் பாதுகாப்பு செயற்பாடுகள்

மொறகஹகந்த அபிவிருத்தி கருத்திட்டத்தின் வனசீவராசிகள் பற்றிய கருத்திட்டப் பிரிவுகள் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுவதாகும். இச்செயற்பாடுகளின் கீழான முன்னுரிமை அக்கறையானது இவ்விடப்பரப்பில் மனித யானை முரண்பாடுகளைக் குறைப்பதற்காகும். அட்டவணை 2.8 ஆனது மொறகஹகந்த கருத்திட்டத்தின் கீழான வனசீவராசிகள் செயற்பாடுகளின் முழு செலவுகளையும் கொடுக்கின்றது.

**அட்டவணை 2.8** 2012 ஆம் ஆண்டில் மொறகஹகந்த கருத்திட்டத்தின் கீழான வனசீவராசிகள் பாதுகாப்பு செயற்பாடுகள்

| **தொ.இல** | **செயற்பாடு** | **நிதி ஒதுக்கீடு** (ரூபா'000) | **பௌதிக முன்னேற்றம்** | **நிதியியல் முன்னேற்றம்** (ரூபா'000) |
|---|---|---|---|---|
| 1 | பயிற்சி | 135 | 100% | 135 |
| 2 | சந்தவாசல-கந்த-புப்பிலிய மின் வேலி | 6358 | கேள்வி திருத்தப்பட்டது<br>வேலைகள் நடைபெறுகின்றன. | 846 |
| 3 | மெதிரிகிரிய டி -மின் வேலி | 13,944 | வேலி உபகரணக் கொள்வனவு பூர்த்தியடைந்துள்ளது. | 3,055 |
| 4 | வஸ்கமுவை ரந்துன்னேவெவ மின் வேலி | 7,500 | - | 183 |
| 5 | அங்கம்மெடில்லை தே.பூ புற்தரை முகாமை | 163 | வேலைகள் நடைபெறுகின்றன. | 136 |
| 6 | VRR சரணாலயத்தில் தீப் பட்டை முகாமை | 5,000 | 17% | 399 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வஸ்கமுவை தே.பூங்காவில் சைகைப் பலகைகள் | 774 | பூர்த்தி செய்யப்பட்டது | 166 |
| 8 | மகாவலி வலயம் ஜீ - மின் வேலி | 20,000 | புதிய 4 மின் கூடாரங்களின் நிர்மாணம் பூர்த்தியடைந்துள்ளது | 15197 |
| 9 | இரண்டு சிங்கல் கெப் வாகனங்களின் கொள்வனவு | 6,000 | பூர்த்திசெய்யப்பட்டு களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது | 5687.7 |
| 10 | வஸ்கமுவை தெற்கு - மின் வேலி | 5,000 | மின் வேலிக்கான பொருட்களின் கொள்வனவு | 14699.3 |
| 11 | புப்பிலிய மின் வேலி | 7,658 | நிர்மாணம் நடைபெறுகின்றது | 15,623 |
| 12 | ராஜம்மன பீட் அலுவலக நிர்மாணம் | 3,500 | 50% | 536 |
| 13 | கவுடுல்ல பீட் அலுவலக நிர்மாணம் | 3,500 | 100% | 783 |
| 14 | வஸ்கமுவை வனசீவராசிகள் பாதுகாப்பு ஊழியர்களுக்கான பயிற்சி | 18 | 100% | 18 |
| **மொத்தம்** | | **79,550** | | **43,403.4** |

**அட்டவணை 2.9** 2012 ஆம் ஆண்டின் நடவடிக்கைத் திட்டச் செயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ.இல. | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000) |
|---|---|---|---|
| **2011-1** பாதுகாக்கப்பட்ட பிரதேச வலையமைப்பை தாபித்தல் | | | |
| 1 | சோமாவதிய தேசிய பூங்காவின் எல்லை நிர்ணயம் (2011 ஆரம்பிக்கப்பட்டது) | 519 எல்லைக் கம்பங்கள் நடப்பட்டன | 1,652 |
| 2 | மாதுறுஒயா தேசிய பூங்காவில் எல்லை நிர்ணயம் | 121 எல்லைக் கம்பங்கள் நடப்பட்டன | 381 |
| 3 | VRR சரணாலயத்தின் எல்லை நிர்ணயம் | 100% பூர்த்தி | 497 |
| 4 | ஹக்கலை தேசிய பூங்காவுக்கான புதிய காணிகளுக்கு எல்லைகள் நிர்ணயித்தல் | 121 எல்லைக் கம்பங்கள் நடப்பட்டன. | 59 |
| 5 | உணகொல்லை பற்றை, VRR சரணாலயம் என்பவற்றிலுள்ள அடையாளப் பலகைகளைப் புனரமைத்தல் | 5 அடையாளப் பலகைகள் புனரமைக்கப்பட்டன. | 48 |
| 6 | கல்வேஸ்லான்ட் தே.பூங்காவின் அடையாளப் பலகைகளைப் புனரமைத்தல் | 16 அடையாளப் பலகைகள் புனரமைக்கப்பட்டன. | 25 |
| 7 | கஹல்ல - பல்லேகலை சரணாலயத்தின் எல்லைகளைக் குறித்தல் | கருத்திட்டம் இரத்துச் செய்யப்பட்டு நிதிகள் வில்பத்து தே.பூங்காவின் எல்லை குறிக்கும் பணிக்கு மாற்றப்பட்டன. | 509 |
| 8 | வடமாகாணத்தில் வனசீவராசிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைக் குறித்தல் / அடையாளப் பலகைகள் | அநுராதபுர பிராந்தியத்துக்கு மாற்றப்பட்ட நிதி போதுமான இல்லை. மிஹிந்தலை சரணாலயத்தில் அடையாளப் பலகைகளை நடுதல் | 206 |
| 9 | மதுகங்கை சரணாலயத்தில் எல்லைகள் குறித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | 453 |
| 10 | ஹொரகொல்லை தே.பூங்காவின் அலுவலகத்திற்கான அறிவூட்டல் அடையாளப் பலகைகளைத் தயாரித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | 27 |
| 11 | கல்லோயா தேசிய பூங்காவின் தென் எல்லையில் எல்லைகளை அடையாளம் கண்டு குறித்தல் | 97 கம்பங்கள் நடப்பட்டன (65 கிமீ) | 428 |
| 12 | பாணம-குடும்பிகல சரணாலயத்தின் வட எல்லையை அடையாளம் கண்டு குறித்தல். | 129 எல்லைக் கம்பங்கள் நடப்பட்டன. | 465 |

| | | | |
|---|---|---|---|
| 13 | உஸ்ஸன்கொடை தேசிய பூங்காவுக்கான அடையாளப் பலகைகள் | 100% பூர்த்தி | 48 |
| 14 | அனைத்துப் பிராந்தியங்களினதும் அடையாளப் பலகைகளைப் புனரமைத்தல் மற்றும் நில அளவைக் கட்டணங்கள் | • புதிதாகப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றிய பிரகடனத்திற்கான மொழிபெயர்ப்புக் கட்டணங்கள்<br>• 18 அடையாளப் பலகைகள் ( ஹொரகொல்லை தே.பூ -12, ஸ்ரீ ஜயவர்தனபுர சரணாலயம் - 05, பிரதிப் பணிப்பாளர் (மேற்கு) அலுவலகம் -01, மதுகங்கை சரணாலயம் 01) புனரமைக்கப்பட்டன.<br>• புதிய அடையாளப் பலகைகள் (02 (தெற்கு பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் 02, ஊவா பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் 01, ஊவா பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் 01) பிரதிப் பணிப்பாளர் (கிழக்கு) 01, பிரதிப் பணிப்பாளர் (பொலனறுவை) 01, பிரதிப் பணிப்பாளர் (மத்திய) 01, பிரதிப் பணிப்பாளர் (தெற்கு) 01) | 393 |
| 15 | பத்திரிகை விளம்பரம் | பூர்த்தி செய்யப்பட்டது | 103 |
| 16 | ஹொரவப்பத்தானை தேசிய பூங்காவிற்கான வர்த்தமானி அறிவித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | 4 |
| 17 | ஹொரவப்பத்தானை தேசிய பூங்காவிற்கான அடையாளப் பலகைகள் தயாரித்தல் | 04 அடையாளப் பலகைகள் தயாரிக்கப்பட்டன. | 473 |
| 18 | றிற்றிகலை ETH இல் 05 அடையாளப் பலகைகள் பொருத்துதல் | 5 பலகைகள் (8'x4'-1 பலகை, 10'x15,-4 பலகைகள்) அடையாளப் பலகைகள் பொருத்தப்பட்டன. | 405 |
| 19 | புபுதுகம பிரதேசத்தை வரைபடமாக்குதல் | பூர்த்தியடைந்துள்ளது. | 4 |
| 20 | புறாத் தீவு தேசிய பூங்காவிற்கான அடையாளப் பலகை - ஆரம்பித்தல் | 3 பலகைகள் பூர்த்தி செய்யப்பட்டன. | 143 |
| 21 | புதிய வனசீவராசிகள் பிராந்திய அலுவலகங்களுக்கான ஒதுக்கீடு - 11 அலுவலகங்கள் | 02 பலகைகள் பூர்த்தி செய்யப்பட்டன | 43 |
| 22 | மின்னேரியா - கிறித்தலை தே.ஒ | பூர்த்தியடைந்துள்ளது. | 2 |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் எலஹர - கிறித்தலை சரணாலயத்திற்கான அடிப்படைத் திட்டத்தைப் பெறுதல் | | |
| 23 | நீதிமன்றக் கட்டணங்கள் | கொடுப்பனவு பூர்த்தியடைந்துள்ளன | 402 |
| 24 | மிஹந்தலை சரணாலயத்தில் சுற்றாடல் தினத்தைக் குறிப்பதற்கான ஞாபகார்த்த பலகை தாபித்தல் | பூர்த்தியடைந்துள்ளது. | 211 |
| 25 | மிஹந்தலை சரணாலயத்திற்கான அடையாளப் பலகை | பூர்த்தியடைந்துள்ளது. | 205 |
| 26 | ஹிகைடுவை தேசிய பூங்காவை மீள் கட்டமைத்தல் | பூர்த்தியடைந்துள்ளது. | 44 |
| 27 | யால தேசிய பூங்காவில் மாற்றுக் கூடாரப் பகுதியை அகற்றுதல் | பூர்த்தி செய்யப்பட்டது | 9 |
| உப மொத்தம் | | | **7,530** |

**2105-01** பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்விடங்களைச் செறிவூட்டுதல்

| | | | |
|---|---|---|---|
| 28 | ஹொரகொல்லை தேசிய பூங்காவில் ஹொக் மான் கருத்திட்டத்திற்கான வாழ்விட முகாமை | தியபர அகற்றுதல் பூர்த்தியடைந்துள்ளது (1.5 ஹெக்டயர்) புதிய புல்வெளி தயாரித்தல் (05 ஹெக்டயர்) | 89 |
| 29 | பெல்லன்வில அத்திடிய சரணாலயத்தில் வாழ்விடம் செறிவூட்டல் (அகாசியா அகற்றுதல், சோபகெத வளவில் புல்வெளி பராமரிப்பு) | பூர்த்தியடைந்துள்ளது (02 ஹெக்டயர்) | 61 |
| 30 | குமண தேசிய பூங்காவில் வீதியின் இருமருங்கும் சுத்தம் செய்யப்படுகின்றன. | 100% பூர்த்தி | 864 |
| 31 | லாஹுகலை தேசிய பூங்காவின் கித்துலான குளத்தில் அகடா மற்றும் சல்வேனியா அகற்றுதல் | 100% பூர்த்தி | 16 |
| 32 | உடவளவை ETH, யில் வாழ்விடம் செறிவூட்டல் (50 ஹெக்டயர்) | பூர்த்தி செய்யப்பட்டது | 202 |
| 33 | உடவளவை ETH இல் புற்தரை பராமரிப்பு (1 ஹெக்டயர்) | பூர்த்தி செய்யப்பட்டது | 70 |
| 34 | உடவளவை தேசிய பூங்காவில் லன்ரானா ( 100 ஹெக்டயர்) அகற்றுதல் | 100% பூர்த்தியடைந்துள்ளது. | 969 |
| 35 | உடவளவை தேசிய பூங்காவில் தீப்பட்டை (10கிமீ) பராமரிப்பு | 10 கிமீ பூர்த்தி செய்யப்பட்டது | 683 |
| 36 | லண்டென அகற்றப்பட்ட இடப்பரப்பினைப் பராமரித்தல் - லுனுகம்வெஹர தேசிய பூங்கா | நடைபெறுகின்றது. | 466 |
| 37 | தப்போவ சரணாலயத்தில் புரொபிஸ் ஜுலிஃப்புளோரா அகற்றுதல் | 21 ஹெக்டயர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 991 |

| | | | |
|---|---|---|---|
| | நானாவிதங்கள் | | 50 |
| 38 | வஸ்கமுவை தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுவதற்கான நியமங்களைத் தயாரித்தல் | 100% பூர்த்தி | 34 |
| 39 | யால தேசிய பூங்காவில் லன்ரானா அகற்றுவதற்கான நியமங்களைத் தயாரித்தல் | 1 ஹெக்டயரில் அகற்றப்பட்டது | 15 |
| 41 | குமண தேசிய பூங்காவிற்கு நீர் வழங்கலுக்கான ஒதுக்கீடு | குமன தே.பூங்காவிற்கு நீர் வழங்குதல் | 93 |
| 42 | தப்போவ சரணாலயத்தில் புரொபிஸ் ஜுலிஃப்புளோரா அகற்றுதல் | 100% பூர்த்தி | 12 |
| 43 | வஸ்கமுவை தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு இனங்களை அகற்றுவதற்கான நியமங்களைத் தயாரித்தல் | 100% பூர்த்தி | 34 |
| 44 | றிகிதலை தோட்டத்தில் மரம் நடுதல் | 100% பூர்த்தி | 30 |
| 45 | லாஹுகலை தேசிய பூங்காவில் உள்ள சிறிய வீதிகளின் இருமருங்கிலும பற்றைகளை அகற்றுதல் | 100% பூர்த்தி | 88 |
| **உப மொத்தம்** | | | **4,767** |
| **கூட்டுமொத்தம்** | | | **12,297** |

# அத்தியாயம் - 3

## சட்ட அமுலாக்கல் பிரிவு

### 3.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- தாவர விலங்கின பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் (FFPO)
- பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தல்
- ஒழுங்குவிதிகளை தயாரித்தலும் FFPO இற்கான திருத்தங்களும்ளூ
- FFPO அமுலாக்கல் தொடர்பாக கள பணியாட்டொகுதியினருக்கு ஆலோசனை கூறல்

### 3.2. செயலாற்றுகை விபரம்

### 3.2.1. தாவர விலங்கின் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

- **வீட்டு யானைகளையும் யானைத் தந்தங்களையும் பதிவுசெய்தல்**

வீடுகளில் வளர்க்கப்படும் யானைகளுக்கு புதிதாக பிறந்த யானைகளை பதிவு செய்தல் FFPO இற்கு இணங்க, எந்தவொரு நபரிடம் உள்ள தந்தங்களைப் பதிவு செய்வதும் யானைகளினதும் தந்தங்களினதும் பதிவுகளைப் புதுப்பிப்பதும் கட்டாயமான ஒரு சட்டத் தேவைப்பாடாகும்.

2012 ஆம் ஆண்டில் 130 யானைகளினதும் 20 யானைத் தந்தங்களினதும் பதிவினைப் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டது. பதிவிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் ரூ 68,800.00

- **வனசீவராசிகள் தொடர்பில் குற்றங்களைக் கண்டுபிடித்தல்**

அறிக்கைக் காலப் பகுதியில் அறுநூற்று ஐம்பத்தொரு (651) தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். நீதிமன்றத்தினால் குற்றப்பணமாக விதிக்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருவாய்கள் ரூபா 24,090,000.00. 2012 ஆம் ஆண்டின் தொடுக்கப்பட்ட வழக்குகளின் பிராந்திய முறையிலான பகிர்ந்தளிப்பு அட்டவணை 3.1இல் கொடுக்கப்பட்டுள்ளன. 2008 இலிருந்து 2012 வரையான காலப்பகுதியின் போது தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை பரம்பல் மற்றும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணத்திலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய் என்பன உரு 3.1 இல் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 3.1:** 2012 ஆம் ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

| **வனசீவராசிகள் பிராந்தியம்** | **வழக்குகளின் எண்ணிக்கை** |
|---|---|
| அநுராதபுரம் | 57 |
| மத்திய | 21 |
| கிழக்கு | 67 |
| மகாவலி | 65 |
| வடமேற்கு | 59 |
| தெற்கு | 129 |
| ஊவா | 85 |
| மேற்கு | 14 |
| திடீர் சுற்றி வளைப்புக் குழு (தலைமை அலுவலகம்) | 32 |
| **2012 ஆம் ஆண்டிற்கான மொத்தம்** | **529** |




உரு **3.1:** நீதிமன்ற வழக்குகளின் வருடாந்த எண்ணிக்கை




**உரு 3.2:** நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டங்கள் மூலமான வருவாய்கள் (2008-2012)

பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கல் பிரிவிற்காக ஆண்டு நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகள் சட்ட அமுலாக்கத்துக்காக உதவியான உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டது. நடவடிக்கைத் திட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் அட்டவணை 3.2 இல் கொடுக்கப்பட்டது.

**அட்டவணை 3.2** :2012 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கை திட்டசெயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ. இல. | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000) |
|---|---|---|---|
| 1 | நீதிமன்ற நடவடிக்கை முறை தொடர்பான ஆற்றல் விருத்தி (1) | • கடல் பாலூட்டிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அச்சிடுதல் • வீட்டு யானைகளைப் பதிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலைத் தயாரித்தல் • 01 அறிவூட்டல் நிகழ்ச்சி.. பிரதிப் பணிப்பாளர் (கிழக்கு) | 275 |
| 2 | நீதிமன்ற வழக்குகளுக்கான புதிய குற்ற மற்றும் முன்னேற்ற கண்காணிப்பு முறை அறிமுகம் (SLaWEN உடன் இணைந்த வகையில்) | வனசீவராசிகள் தொழிற்பாட்டுக் கையேட்டுடன் இணைந்த வகையில் உள்நாட்டு மீன் வகைகளை இனங்காண்பதற்கான குறிகாட்டிகளைத் தயாரித்தல் அதற்காக ஒரு பயிற்சி நிகழ்ச்சி நடாத்துதலும். For it) | 1,517 |
| 3 | இலங்கை வனசீவராசிகள் வலுவூட்டல் வலையமைப்பின் 2012 "SARC" பிராந்தியக் கூட்டத்தை நடாத்துதல் | வெற்றிகரமாக நடாத்தப்பட்டது | 3,765 |
| 4 | இலங்கை வனசீவராசி | 01 GPS பயிற்சி நிகழ்ச்சி, நெருப்பு கையாளல் நிகழ்ச்சி | 444 |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்படுத்தல் வலையமைப்பு செயற்பாடுகள் - ஆற்றலைக் கட்டியெழுப்புதல் | என்பன நடாத்தப்பட்டன. உலர் பருவங்களில் ரோந்து செல்லுதல் (குமண,யால துண்டம் III) | |
| 5 | ஹக்கலை SNR இல் ஆக்கிரப்புத் தாவரங்களை அகற்றுதல் | தகவல் சேகரிப்பதற்காக முழுமையான அளவாய்வு ஒன்றை மேற்கொள்ளுதல் | 86 |
| **மொத்தம்** | | | **6,087** |

## அத்தியாயம் - 4

## யானை பாதுகாப்பு பிரிவு

### 4.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- தேசிய யானைப் பாதுகாப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
- யானை தொடர்பிலான தரவு மற்றும் தகவல் மீதான தரவுத்தளத்தினை பேணலும் புதுப்பித்தலும்
- யானை நடைபாதைகள் உள்ளடங்கலாக யானைப் பாதுகாப்பு இடப்பரப்பினை தாபித்தல்
- மனிதனுக்கும் யானைக்கும் இடையேயான மோதல் காரணமான சேதங்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு
- குடியிருப்புகளில் யானைகளின் நடமாட்டங்களிற்கு எதிராக மின்வேலிகள், வடலி வேலிகள் மற்றும் வேறு புதுமையான தீர்வுகள் போன்ற பௌதிக தடைகளை நிர்மாணித்தலும் முகாமைசெய்தலும்
- யானைகளை பிடித்தலும் வேறிடத்திற்கு எடுத்துச்செல்லலும்
- யானைத் துரத்தல்களை ஒழுங்கமைத்தலும் அதன் முன்னேற்றங்களை கண்காணித்தலும்;
- யானை முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட பொருட்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்

**செயலாற்றுகை விபரம்**

### 4.2. மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதல் (HEC)

யானைகள் வாழ்வதற்கான அனுகூலமான வாழிடங்களின் தொடர்ச்சியாக சுருங்கி வருவதன் காரணமாகவும் நில பயன்பாட்டின் பாங்கிலான மாற்றம் மற்றும் தற்போதுள்ள வாழ்விடங்களின் தரம் பங்கப்படுத்தப்படுவதன் காரணமாக இலங்கையின் யானைகளின் இருப்பு தற்போது தீவிரமான அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றது. மோதலின் விளைவாக ஆதன சேதங்கள், மனிதர்களும் யானைகளும் காயமடைதல் மற்றும் உயிரிழத்தல் போன்றவை ஏற்பட்டுள்ளன. யானை இறப்பு, மனித இறப்பு, யானை தாக்குதல் காரணமாக ஏற்படும் காயங்கள் மற்றும் ஆதன சேதங்கள் சம்பந்தமான தரவுகள் என்பன அட்டவணை 4.1, 4.2, 4.3 மற்றும் 4.4, வடிவங்கள் 4.1, 4.2, 4.3 மற்றும் 4.4 இல் விபரிக்கப்படுகின்றன.

**அட்டவணை 4.1:** 2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் யானை இறப்பின் பிராந்திய ரீதியிலான பரம்பல்

| வனசீவராசிகள் பிராந்தியம் | வருடாந்தம் யானை இறப்புக்களின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | மொத்தம் |
| **அநுராதபுரம் | _ | _ | _ | _ | 19 | 19 |
| மத்திய | 4 | 3 | 2 | 3 | 5 | 17 |
| கிழக்கு | 23 | 41 | 42 | 33 | 47 | 186 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வட மேற்கு | 92 | 66 | 66 | 82 | 66 | 372 |
| பொலன்னறுவை | 65 | 72 | 74 | 90 | 72 | 373 |
| தெற்கு | 30 | 30 | 35 | 36 | 22 | 153 |
| *ஊவா | _ | _ | _ | _ | 19 | 19 |
| யால புந்தல | 10 | 16 | 8 | 11 | _ | 45 |
| **மொத்தம்** | 224 | 228 | 227 | 255 | 250 | **1,184** |

* 2012 ஜூன் மாதத்தில் புதிய வனசீவராசிகள் பிராந்தியம் உருவாக்கப்பட்டது

„„ 2012 ஆகஸ்ட் மாதத்தில் புதிய பிராந்திய அலுவலகம் உருவாக்கப்பட்டது

**அட்டவணை 4.2** யானை இறப்புக்களின் வகைப்படுத்தல் - 2012

| பிராந்தியம் | ஆண் | பெண் | இளம்பருவத்தினர் | அடையாளம் காணப்படாதவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **அநுராதபுரம் | 14 | 4 | _ | _ | 19 |
| மத்திய | 3 | 0 | 1 | 1 | 5 |
| கிழக்கு | 30 | 17 | _ | _ | 47 |
| வடமேற்கு | 30 | 26 | 1 | 9 | 66 |
| பொலன்னறுவை | 39 | 29 | _ | 4 | 72 |
| தெற்கு | 12 | 5 | _ | 3 | 22 |
| *ஊவா | 13 | 3 | _ | 3 | 19 |
| **மொத்தம்** | 141 | 84 | 2 | 21 | **250** |

**அட்டவணை 4.3** யானைகளின் இறப்புக்கான காரணங்கள் - 2012

| பிராந்தியம் | துப்பாக்கி சூட்டினால் | மின்சாரம் தாக்கி | நஞ்சூட்டப்பட்டு | ஹக்க படாஸ் | புகையிரத விபத்து | புலப்படாத காரணங்கள் | விபத்து | இயற்கை | வேறு காரணங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அநுராதபுரம் | 2 | 2 | 0 | 5 | 2 | 2 | 5 | 0 | 1 | 19 |
| மத்திய | 2 | 0 | 0 | 0 | 0 | 2 | 0 | 0 | 1 | 5 |
| கிழக்கு | 14 | 4 | 2 | 6 | 0 | 12 | 2 | 6 | 1 | 47 |
| வட மேற்கு | 17 | 5 | 3 | 12 | 3 | 15 | 4 | 2 | 5 | 66 |
| பொலன்னறுவை | 13 | 7 | 0 | 16 | 5 | 23 | 3 | 4 | 1 | 72 |
| தெற்கு | 1 | 2 | 1 | 0 | 0 | 15 | 2 | _ | 1 | 22 |
| *ஊவா | 1 | 1 | 0 | 0 | 0 | 11 | 2 | 3 | 1 | 19 |
| **மொத்தம்** | **50** | **21** | **6** | **39** | **10** | **80** | **18** | **15** | **11** | **250** |

**அட்டவணை 4.4:** யானை தாக்குதல் காரணமான மனித இறப்பின் வருடாந்த எண்ணிக்கை

| **பிராந்தியம்** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|
| **அநுராதபுரம் | – | – | – | – | 12 | 12 |
| மத்திய | 3 | 3 | 4 | 6 | 0 | 16 |
| கிழக்கு | 9 | 10 | 14 | 5 | 18 | 56 |
| மகாவலி | 16 | 14 | 14 | 22 | 20 | 86 |
| வட மேற்கு | 33 | 19 | 34 | 20 | 20 | 126 |
| தெற்கு | 8 | 3 | 9 | 6 | 7 | 33 |
| *ஊவா | – | – | – | – | 1 | 1 |
| யால புந்தல | 2 | 1 | 6 | 1 | 1 | 11 |
| **மொத்தம்** | **71** | **50** | **81** | **60** | 79 | 341 |

**அட்டவணை 4.5** யானை தாக்குதலினால் ஏற்பட்ட மனித இறப்புக்களை வகைப்படுத்தல்

| **வருடம்** | **ஆண்கள் (வயது வந்தவர்கள்)** | **பெண்கள் (வயது வந்தவர்கள்** | **சிறுவர்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| 2008 | 57 | 13 | 1 | 71 |
| 2009 | 43 | 7 | 0 | 50 |
| 2010 | 64 | 16 | 1 | 81 |
| 2011 | 50 | 10 | 0 | 60 |
| 2012 | 64 | 13 | 2 | 79 |
| **மொத்தம்** | 278 | 59 | 4 | 341 |

**அட்டவணை 4.6** யானைத் தாக்குதல்களின் காரணமாக மனிதர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் பிராந்திய ரீதியான பரம்பல் (2008-2012)

| **பிராந்தியம்** | **வருடாந்தம் காயமடைந்தோர் எண்ணிக்கை** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **மொத்தம்** |
| **அநுராதபுரம் | _ | _ | _ | _ | 0 | 0 |
| மத்திய | 0 | 0 | 4 | 1 | 0 | 5 |
| கிழக்கு | 11 | 5 | 8 | 7 | 15 | 46 |
| மகாவலி | 10 | 22 | 27 | 21 | 16 | 96 |
| வட மேற்கு | 38 | 12 | 37 | 25 | 27 | 139 |
| மத்திய | 0 | 0 | 4 | 1 | 0 | 5 |
| ஊவா | – | – | – | – | 0 | 0 |
| யால-புந்தல | 4 | 1 | 3 | 0 | 2 | 10 |
| **மொத்தம்** | 63 | 40 | 83 | 55 | 60 | 301 |

**அட்டவணை 4.7** ஆதனங்களில் ஏற்பட்ட சேதங்களின் பிராந்திய ரீதியான பரம்பல் (2008-2012)

| **பிராந்தியம்** | **வருடாந்தம் நிகழ்ந்த ஆதனச் சேதங்களின் எண்ணிக்கை** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **மொத்தம்** |
| **அநுராதபுரம் | – | – | – | – | 58 | 58 |
| மத்திய | 35 | 40 | 64 | 81 | 26 | 246 |
| கிழக்கு | 53 | 155 | 266 | 304 | 267 | 1045 |
| மகாவலி | 180 | 230 | 670 | 469 | 429 | 1978 |
| வட மேற்கு | 233 | 203 | 812 | 247 | 2269 | 3764 |
| தெற்கு | 138 | 131 | 145 | 124 | 108 | 646 |
| ஊவா | – | – | – | – | 21 | 21 |
| யால-புந்தல | 45 | 68 | 40 | 0 | 5 | 158 |
| **மொத்தம்** | 684 | 827 | 1997 | 1225 | 3183 | 79160 |

### 4.2.1. மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதலைக் குறைத்தல்

மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதல் எச்சரிக்கை மட்டத்தில் இருப்பதனால் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் இம்மோதலைக் குறைப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதலைக் குறைக்கும் தேசிய கொள்கையின்கீழ் பல்வேறு உத்திகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. குறிப்பாக மின் வேலிகள் யானைகளை துரத்தல், இடிச்சத்த கிளரொலியும் பாம்பு வடிவ கிளரொளியையும் ஏற்படுத்தல், வாழிடத்தினை வளப்படுத்தல், வாழிட இணைப்பினை தாபித்தல் என்பன வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் தற்போதைய பிரதான அக்கறை ஆகும். மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதலைக் குறைப்பதில் பன்முகப்படுத்தப்பட்ட அணுகுமுறையாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் 'கஜ மிதுரோ' நிகழ்ச்சித்திட்டத்தினை 2008ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தியுள்ளது.

### 4.2.2. கஜமிதுரோ நிகழ்ச்சித் திட்டம்

கஜ மிதுரோ நிகழ்ச்சித்திட்டம் 18 மாவட்டங்களின் 58 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மனிதனுக்கும் யானைக்குமிடையேயான மோதலைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வகுத்தமைக்கப்பட்டது. மின்வேலிகளின் நிர்மாணிப்பு, 15 யானை கட்டுப்பாட்டு அலகுகளின் நிறுவுதல், இடிச்சத்த கிளரொலி மற்றும் பாம்பு வடிவ கிளரொளி கொள்வனவு, மனித இறப்பு, காயங்கள் மற்றும் ஆதன சேதங்களுக்கான நட்டவீட்டுக் கொடுப்பனவு, கள வாகனங்களின் கொள்வனவு என்பன கஜ மிதுரோ நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளாக இருந்தன.

கஜ மிதுரோ நிகழ்ச்சித்திட்டம் ஒருவகையான பங்குபற்றல் முகாமை மற்றும் நடைமுறைப்படுத்தல் கருத்திட்டமாகும். இது தேசிய அதே போன்று கிராம மட்ட அலுவலர் மற்றும் தனியாட்களின் ஆதரவை பெறுவதற்காக வகுத்தமைக்கப்பட்டுள்ளது. கஜ மிதுரோ செயற்குழுவின் தெளிவுபடுத்தப்பட்ட ஒழுங்கமைப்பு கீழே காட்டப்படுகின்றது. இக்கருத்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

தேசிய செயற்பாட்டுக் குழு

⇓

மாவட்ட செயற்பாட்டுக் குழு

(மாவட்டத்திற்கு ஒவ்வொன்றாக 15 மாவட்டங்களுக்கும் குழுவை தாபிக்கப்பட்டது)

⇓

கஜ மிதுரோ அதிரடிப்படை

(ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் ஒவ்வொன்றாக 58 பிரதேச செயலாளர் பிரிவிற்குமான குழுக்கள்)

⇓

செயற்குழு

(யானை மனித மோதலினால் பாதிகப்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் ஒரு குழு)

**அட்டவணை 4.8:** கஜமிதுரோ நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்

| தொ. இல. | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000) |
|---|---|---|---|
| 1 | வேலி அமைக்கப்படவுள்ளது | 377.60 கிமீ | 133,746 |
| 2 | நிர்வாகம்/மின் வேலி ஊழியர் | பூர்த்தி செய்யப்பட்டது | 17,739 |

| | | | |
|---|---|---|---|
| 3 | EC அலகுகளுக்கான ஒதுக்கீடு | பூர்த்தி செய்யப்பட்டது | 4,500 |
| 4 | 2011 இல் ஒப்படைக்கப்பட்டவை - மட்டக்களப்பில் ECU யின் மீதி வேலைகள் | பூர்த்தி செய்யப்பட்டது | 3,108 |
| 5 | 2011 ஒப்படைப்புக்கள் - லுணுகம்வெஹர கோஸ்வேக்களின் மீதி வேலைகள் | பூர்த்தி செய்யப்பட்டது | 950 |
| 6 | 2011 ஒப்படைப்புக்கள் - STC இற்கான விலைப்பட்டியல் கொடுப்பனவுகள் | பூர்த்தி செய்யப்பட்டது | 14,074 |
| 7 | யானைகளினால் ஏற்பட்ட சேதங்கள் | கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டன | 632 |
| 8 | வீதித் தடை நிர்மாணம், சுத்தம் செய்தல், நிர்மாணம் ( நிற்றிகலை ETH இல் 06 ஏக்கர் நிழற் பிரதேசம் மற்றும் வீதிகளுக்கு சரளைக் கற்கல் பதித்தல்) | பூர்த்தி செய்யப்பட்டது | 317 |
| | **உப மொத்தம்** | | **177.6** |

### 4.2.3. மின் வேலி அமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையில் 1966 ஆம் ஆண்டிலிருந்து காட்டு யானைகளுக்கெதிரான மனோரீதியான தடையொன்றாக மின்வேலி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இன்று இது கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட பயிர்ச்செய்கை இடப்பரப்புகளில் யானைகளினால் ஏற்பட்ட அழிவுகளை குறைப்பதில் முன்னணி வாய்ந்த முகாமை கருவியாக வந்துள்ளது.

கஜமிதுரோ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டில் 377.6 கிமீ மின் வேலிகள் நிர்மாணிக்கப்பட்டன. தற்போதைய வேலிகளில் தேவையான மீள்நிர்மாணங்களும் திருத்தங்களும் செய்யப்பட்டன.

**அட்டவணை 4.9** 2012 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட புதிய மின் வேலிகள்

| **மின் வேலியின் பெயர்** | **மின் வேலியின் நீளம் (கிமீ)** |
|---|---|
| இஹலகூவெவ, கடுஅக்கெலியாவை | 12.00 |
| மன்னம்பிட்டி, கட்டுவான்வில | 8.00 |
| தியகெபில்ல கிராமிய வேலி | 5.75 |
| கஹல்ல கரவிலகல | 12.00 |
| வெலிகத்த | 20.00 |
| பியன்ஹல, உன்னாச்சி | 40.00 |

| | |
|---|---|
| புள்ளேமலை, கோப்பாவெளி | 23.00 |
| தெறிபஹ விக்டோரியா | 25.00 |
| எரியாய கிராமிய வேலி | 5.60 |
| கலாவெவ | 6.50 |
| உடவளவை | 18.00 |
| கொஹொம்பதிகண | 2.00 |
| தெமட்டபெலெஸ்ஸ | 4.00 |
| ஹுணுகமலாஓய | 2.00 |
| சீகிரியா | 3.00 |
| மினிப்பே, புலத்வெல்கந்துர | 5.50 |
| ஹுணுவிலாகம போகொட | 39.50 |
| **மொத்தம்** | 231.85 |

### 4.2.4. 2012 ஆம் ஆண்டின் இடிச்சத்த கிளரொலி பாம்பு வடிவ கிளரொளி கொள்வனவு

விசேடமான முறையில் வடிவமைக்கப்பட்ட இரண்டு வகையான பட்டாசுகள் அதாவது இடிச்சத்த கிளரொலி மற்றும் பாம்பு வடிவ கிளரொளிகள் வருடாந்தம் தொகையாக கொள்வனவு செய்யப்பட்டு வனசீவராசி அலுவலர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. மனிதனுக்கும் யானைக்குமிடையே மோதல் ஏற்படும் இடப்பரப்புகளின் கிராமத்தவர் பட்டாசுகளை வனசீவராசி அலுவலரிடமிருந்து பெறுகின்றனர். அட்டவணை 4.10 வருடாந்த கொள்வனவை காட்டுவதுடன் அட்டவணை 4.11 இத்தகைய பட்டாசுகளின் வருடாந்த பகிர்ந்தளிப்பை விபரிக்கின்றது.

**அட்டவணை 4.10** 2012 ஆம் ஆண்டின் இடிச்சத்த கிளரொலி பாம்பு வடிவ கிளரொளி கொள்வனவு

| வகை | கொள்வனவு செய்ய்ப்பட்ட அளவு | செலவினம் (ரூபா) |
|---|---|---|
| இடிச்சத்த கிளரொலி (பெரிய) | 2,39,000 | 2,00,13,000.00 |
| இடிச்சத்த கிளரொலி (சிறிய) | 1,25,000 | 79,62,825.00 |
| பாம்பு வடிவ கிளரொளி | 1,50,000 | 1,54,88,200.00 |
| **மொத்தம்** | **5,14,000** | **4,34,64,025.00** |

அட்டவணை **4.11** 2012 ஆம் ஆண்டின் இடிச்சத்த கிளரொலி மற்றும் பாம்பு வடிவ கிளரொளி பகிர்ந்தளிப்பு

| **வனசீவராசி பிராந்தியம்** | **இடிச்சத்த கிளரொலி** | | **பாம்பு வடிவ கிளரொளி** |
|---|---|---|---|
| | **சிறியது** | **பெரியது** | |
| அநுராதபுரம் | 31,500 | 51,000 | 33,000 |
| மத்திய | 10,500 | 14,000 | 9,000 |
| கிழக்கு | 28,650 | 53,500 | 29,800 |
| வட மேற்கு | 14,000 | 23,800 | 17,160 |
| பொலன்னறுவை | 33,300 | 41,400 | 29,600 |
| தெற்கு | 17,300 | 34,500 | 23,000 |
| ஊவா | 7,450 | 13,000 | 8,500 |
| **மொத்தம்** | **1,42,700** | **2,31,200** | **1,50,060** |

### 4.2.5. காட்டு யானைகளினால் ஏற்பட்ட சேதங்களுக்கான நட்டஈடு வழங்கும் திட்டம்

யானைகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதத்தினை ஈடு செய்வதற்காக அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்ட்ட நட்டஈட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட நட்டஈடு பற்றிய விபரங்கள் 4.12 ஆம் 4.13 ஆம் அட்டவணைகளில் விரிவாக தரப்பட்டுள்ளது.

அட்டவணை **4.12: 2012** ஜனவரி **01** முதல் **2012** ஆகஸ்ட் **31** வரையான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள்

| **பிராந்தியம்** | **மனித மரணங்கள்** | | **காயங்கள்** | | **சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா) மில்லியன்)** | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா) மில்லியன்)** | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா) மில்லியன்)** |
| மத்திய | 1 | 0.1 | 0 | 0 | 22 | 0.22 |
| கிழக்கு | 3 | 0.3 | 11 | 0.150 | 212 | 3.50 |
| மகாவலி | 13 | 1.3 | 12 | 0.200 | 295 | 6.13 |
| வடமேற்கு | 14 | 1.4 | 26 | 0.414 | 2262 | 5.06 |
| தெற்கு | 10 | 1.0 | 0 | 0 | 92 | 1.57 |
| யால | 1 | 0.1 | 2 | 0.006 | 5 | 0.09 |
| மொத்தம் | 42 | 4.20 | 51 | 0.77 | 2888 | 16.57 |

செலுத்தப்பட்ட மொத்த நட்டஈடு ரூபா. 21.54

அட்டவணை **4.13: 2012** செப்டெம்பர் **01** முதல் **2012** டிசம்பர் **31** வரை செலுத்தப்பட்ட நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள்

| **பிராந்தியம்** | **மரணங்கள்** | | **காயங்கள்** | | **சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள்** | |
|---|---|---|---|---|---|---|
| | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)** | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)** | **சம்பவங்களின் எண்ணிக்கை** | **செலுத்தப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)** |
| அநுராதபுரம் | 8 | 0.8 | 0 | 0 | 58 | 1.570 |
| மத்திய | 0 | 0 | 0 | 0 | 4 | 0.070 |
| கிழக்கு | 10 | 1 | 4 | 0.05 | 55 | 0.930 |
| வடமேற்கு | 3 | 0.3 | 1 | 0.002 | 7 | 0.108 |
| பொலன்னறுவை | 7 | 0.7 | 1 | 0.07 | 134 | 2.180 |
| தெற்கு | 2 | 0.2 | 0 | 0 | 16 | 0.210 |
| திருகோணமலை | 1 | 0.1 | 0 | 0 | 0 | 0 |
| ஊவா | 1 | 0.1 | 0 | 0 | 21 | 0.380 |
| மொத்தம் | 32 | 3.2 | 6 | 0.122 | 295 | 5.448 |

செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை ரூபா 8.77 மில்லியன்

### 4.2.6. 2012 இல் பிடிக்கப்பட்டு வேறிடத்திற்கு மாற்றப்பட்ட யானைகள்

இருபத்தைந்து அட்டூழியம் புரியும் யானைகள் பிடிக்கப்பட்டு குமண மற்றும் மாதுரு ஓய தேசிய பூங்காவில் விடுவிக்கப்பட்டன. இந்தச் செயற்பாடுகளுக்கு வனசீவராசிகள் பாதுகாப்பு நிதியத்தினால் நிதியளிக்கப்பட்டது. யானைகள் பிடிக்கப்பட்ட வேறு இடங்களுக்கு மாற்றப்பட்ட சம்பவங்களின் பரம்பல் 4.10 ஆம் 4.11 அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை **4.14** :2012 இல் பிடிக்கப்பட்டு வேறிடத்திற்கு மாற்றப்பட்ட யானைகள்

| **வனசீவராசி பிராந்தியம்** | **பிடிக்கப்பட்ட யானைகளின் எண்ணிக்கை** | **செலவினம் (ரூபா)** |
|---|---|---|
| அநுராதபுரம் | 06 | 29,70,427.00 |
| தெற்கு | 04 | 15,12,480.00 |
| பொலனறுவை | 03 | 8,61,006.00 |
| மத்திய | 02 | 6,66,821.00 |
| கிழக்கு | 01 | 2,15,000.00 |
| மொத்தம் | 16 | 62,25,734.00 |

### 4.2.7. 2012 ஆம் ஆண்டில் யானை துரத்தல்

மோதல் இடப்பரப்புகளிலிருந்து யானைகளை விரட்டுவதற்காகவும் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளில் அவற்றினை வைத்திருப்பதற்காகவும் யானை துரத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் 8 ஒழுங்கமைக்கப்பட்ட யானைத் துரத்தலை நிறைவேற்றியது. அட்டவணை 4.15 வருடாந்த ரீதியிலான யானை துரத்தல் தகவலை வெளிப்படுத்துகின்றது.

**அட்டவணை 4.15:** 2012 ஆம் ஆண்டில் யானை துரத்தல்

| **வனசீவராசிகள் பிராந்தியம்** | **விபரம்** | **துரத்தப்பட்ட யானைகளின் எண்ணிக்கை அண்ணளவாக** |
|---|---|---|
| வடமேற்கு | கிறபாவை முதல் அமுணுகுல வரை | 85 |
| | மயிலன்குளம், புத்தளம் முதல் தப்போவ வரை | 70 |
| | கொட்டவெஹெர, நிகவரட்டிய முதல் இங்கினிமிட்டிய வரை | 73 |
| | றம்கனயாகம, நவகத்தேகம முதல் தப்போவ வரை | 60 |
| | கருவல்கஸ்வெவ முதல் தப்போவ வரை | 25 |
| மத்திய | வெலிஹிந்த, மொரகஹதென்ன முதல் VRR வரை | 10 |
| | மபகவவெவ, தம்பரவெ முதல் மாதுறுஒயா தேசிய பூங்கா வரை | 14 |
| பொலன்னறுவை | ஹதமுனகல, மாத்தளை முதல் அலஹெர | 16 |
| ***2012*** ஆம் ஆண்டில் துரத்தப்பட்ட யானைகளின் அண்ணளவான எண்ணிக்கை | | **351** |

### 4.2.8. தயட்ட கிருள கண்காட்சி – ஒயமடுவ

**அட்டவணை 4.16:** தயட்ட கிருள கண்காட்சி – ஒயமடுவ

| **தொ இல.** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்ட தலைப்பு** | **பௌதிக முன்னேற்றம்** | **நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000)** |
|---|---|---|---|
| 1 | 2012 தயட்ட கிருள கண்காட்சி | பூர்த்தியடைந்துள்ளது. | 1,311 |

## அத்தியாயம் - 5

## ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவு

### 5.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- வனசீவராசி பாதுகாப்பு திணைக்களத்திற்கான ஆராய்ச்சி, பயிற்சித் திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வரவுசெலவு திட்டத்தினை தயாரித்தல்
- ஆராய்ச்சி குழுவை அமைத்தலும் பேணலும்
- வகசீவராசி பாதுகாப்பு திணைக்களத்தின் நூலகத்தினை நிருவகித்தலும் அபிவிருத்தி செய்தலும்
- பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்
- NWTRC இனை மேற்பார்வை செய்தல்

### 5.2. ஆராய்ச்சி

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் வனசீவராசி முகாமையை நோக்காககொண்ட குறுங்கால ஆராய்ச்சி கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக அதன் பணியாட்டொகுதியினருக்கு நிதியளிக்கின்றது. இத்தகைய ஆராய்ச்சிகளின் பயன்மிக்க முடிவுகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் முகாமைக்காகப் பயன்படுத்தப்படும்

மேலும் விண்ணப்பதாரர்கள் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் வலையமைப்பிலும் பாதுகாக்கப்பட்ட இடப்பரப்பின் வலையமைப்பிற்கு வெளியேயும் ஆராய்ச்சி கருத்திட்டங்களை நடாத்த வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் அனுமதிப்பத்திரங்களை வழங்குகின்றது. வெளியேயுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களும் தனியாட்களும் இச்சந்தர்ப்பத்தை பணன்படுத்துகின்றனர். அத்தகைய ஆராய்ச்சிகளுக்கு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியை பெறுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 5.1 வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணியாட்டொகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட குறுங்கால ஆராய்ச்சி கருத்திட்டங்களையும் காட்டுவதுடன் அட்டவணை 5.2 இல் 2012 ஆம் ஆண்டின்போது வனசீவராசிகள் பாதுகாப்பு இடப்பரப்பினுள் நடாத்தப்பட்ட இணைந்த ஆராய்ச்சி கருத்திட்டத்தை காட்டுகின்றது.

**அட்டவணை 5.1:** 2012 ஆம் ஆண்டில் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி

| தொடர் இல. | ஆராய்ச்சித்தலைப்பு |
|---|---|
| 1 | மின்சார வேலிகளுக்கான குறைந்த செலவிலான வலுவூட்டியை வடிவமைத்தல் |
| 2 | வனசீவராசிகள் முகாமையுன் இயற்கையை அடிப்படையாகக் சுற்றுலாத்துறை |

| | |
|---|---|
| | மேம்பாட்டுக்கான இணையத்தள GIS |
| 3 | காட்டு யானைகளில் காணப்படும் சயரோகம் தொடர்பான ஆய்வு |
| 4 | புறாத் தீவு தேசிய பூங்காவில் பவளப் பாறைகளை இனங்காணுதல் |
| 5 | மின்னேரியா தேசிய பூங்காவில் தும்பிகள் பற்றி ஆய்வு செய்தல் |
| 6 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் தற்போதைய சட்டம் அமுலாக்கல் நடைமுறைகளின் தோல்விகளையும் வெற்றிகளையும் இனங்காணுதல் |
| 7 | ஹக்கலை எஸ்என்ஆர் இல் ஓர்கிட் இனங்களை இனங்காணுதல் |
| 8 | வனசீவராசிகள் கள உத்தியோகத்தர்கள் பணியக முறைமையுடன் கொண்டுள்ள இயைபாக்கம் தொடர்பான ஆய்வு |
| 9 | வில்பத்து தேசிய பூங்காவின் கங்கேவாடிய தெற்கில் உள்ள மங்குரூவ் இனங்களை இனங்காணுதல் |

**அட்டவணை 5.2:** 2012 ஆம் ஆண்டிற்கான இணைந்த ஆராய்ச்சி கருத்திட்டங்கள்

| தொடர் இல. | ஆராய்ச்சித் தலைப்பு | இணை நிறுவகம் |
|---|---|---|
| 01 | பூந்தல தேசிய பூங்கா தேசிய பறவை வளையங்கட்டுதல் நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை கள பறவையியலாளர் குழு |

## 5.3. பயிற்சி

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் இரு வேறுபட்ட வகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,

1. குறுங்கால விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
2. வழமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இதற்கு மேலதிகமாக கிடைக்கும் தன்மையைப் பொறுத்து வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள பணியாட்டொகுதியினருக்காக வெளிநாட்டு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

### 1. குறுங்கால விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அலுவலர்களுக்கு விடயத்தின் பரந்த எல்லைமீதான அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்வதற்காக இத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டன. இத்தகைய பாடநெறிகளின் அதிகமானவை பல்வேறு பயிற்சி நிறுவகங்கள் அல்லது ஒழுங்கமைப்புக்களுடன்

இணைந்து நடாத்தப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அத்தகைய பயிற்சி நெறிகளின் விபரங்கள் அட்டவணை 5.3 இல் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 5.3:** 2012 ஆம் ஆண்டில் வனசீவராசிகள் அலுவலர்களுக்காக நடாத்தப்பட்ட குறுங்கால விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| தொ. இல. | பயிற்சி நிகழ்ச்சித்திட்ட தலைப்பு | பங்குபற்றுநர் எண்ணிக்கை | இலக்குக் குழு | செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | படகு ஓட்டுதல் மற்றும் பராமரிப்பு | 15 | RA,WG | 1,11,621.00 |
| 2 | தமிழ்மொழி - மட்டம் I | 25 | MFA,MA | இலவசம் |
| 3 | GPS பயிற்சி | 30 | R,RA,WG | 52,350.00 |
| 4 | பங்களா பாதுகாவலர்களுக்கான பயிற்சி | 15 | BK,PL | 66,058.00 |
| 5 | காட்டு யானைகளுக்கு GPS கொலரிங் | 28 | R,RA,WG | 85,142.00 |
| 6 | காடாக்கம் மற்றும் சூழல் முகாமை தொடர்பான விஞ்ஞான முதுமானி | 01 | பிரதிப் பணிப்பாளர் | 1,20,000.00 |
| 7 | பாலியோ உயர்ப் பல்வகைமை டிப்ளோமா | 02 | | இலவசம் |
| 8 | புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு | 70 | இ.பு.தி. உத்தியோகத்தர்கள் | 63,000.00 |
| 9 | சுடு துவக்குகளை கையாளுதலும் களச் செயற்பாடுகளும் | 48 | R, RA, WG | 4,00,241.00 |
| 10 | வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான மனப்பாங்கு மற்ற, நேர்ச் சிந்தனை நிகழ்ச்சி | 35 | R,RA,WG | |
| 11 | நீதிமன்ற நடைமுறைகள் | 25 | R,RA, WG | 1,01,800.00 |
| **மொத்தம்** | | | | **10,00,212.00** |

குறிப்பு:
R – வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்
RA – வனப் பாதுகாப்பு உதவியாளர்
WG – வனசீவராசிகள் காவலாளி
DD – பிரதிப் பணிப்பாளர்
MFA – முகாமைத்துவ நிதி உதவியாளர்
MA – முகாமைத்துவ உதவியாளர்

இவை தவிர NWTRC குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்தியது. விபரங்கள் அட்டவணை 5.4 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.4:** 2012 ஆம் ஆண்டில் NWTRC இனால் நடாத்தப்பட்ட குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகள்

| இல. | பயிற்சி நிகழ்ச்சி | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| 1 | புகையிரத உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 29,325.00 | 26,756.00 |
| 2 | வரைபட வாசிப்பு மற்றும் GPS தொடர்பான பயிற்சி | 52,350.00 | 46,611.00 |
| 3 | புகையிரத உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 34,150.00 | 33,421.00 |
| 4 | உள்நாட்டு மீன் இனங்களை இனங்காணுதல் - பிரயோக வழிகாட்டி தொடர்பான பரீட்சார்த்தச் சோதனை | 43,000.00 | 42,511.00 |
| 5 | புகையிரத உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 34,650.00 | 34,603.50 |
| 6 | முகாமைத்துவ உதவியாளர்களுக்கான யானை முகாமை தொடர்பான பயிற்சி | 1,00,000.00 | 85,681.50 |
| 7 | புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சி | 3,50,000.00 | 3,01,144.80 |
| 8 | GPS பயிற்சி | 1,03,400.00 | 94,929.00 |
| 9 | வாழ்விடங்களைச் செறிவூட்டுதல் | 38,600.00 | 38,456.00 |
| **மொத்தம்** | | **7,85,475.00** | **7,04,113.80** |

## 5.4 வழமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

வழமையான பயிற்சி பாடநெறிகள் வனசீவராசிகள் பாதுகாப்பு கள உத்தியோகத்தர்களுக்கு (வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், வனப் பாதுகாப்பு உதவியாளர்கள், வனசீவராசிகள் காவலாளிகள்) மாத்திரம் உரியாதகும். 2012 ஆம் ஆண்டில் தேசிய வனசீவராசிகள் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அட்டவணை 5.5 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.5**: 2012 ஆம் ஆண்டில் NWTRC இனால் நடாத்தப்பட்ட வழமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| | வழமையான பயிற்சி நிகழ்ச்சிகள் | பயிற்சியாளர் வகை | செலவினம் (ரூபா.'000') |
|---|---|---|---|
| 1 | வனசீவராசிகள் முகாமைக்கான கனிஷ்ட சான்றிதழ் பாடநெறி | வனசீவராசிகள் காவலாளிகளின் XXIX( தொகுதி) | 639 |
| 2 | வனசீவராசிகள் முகாமை டிப்ளோமா சான்றிதழ் பாடநெறி | VII ஆம் தொகுதியினர் | 1,708 |
| **மொத்தம்** | | | **2,347** |

- ***சர்வதேச பயிற்சி***

  வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள பணியாட்டொகுதியினருக்கு கிடைக்க செய்யப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.6:** 2012ஆம் ஆண்டில் வனசீவராசி அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகள்

| தொ. இல | பயிற்சி | பதவிகள் மற்றும் பங்குபற்றுநர் எண்ணிக்கை | நாடு | காலம் |
|---|---|---|---|---|
| 01 | RRC-EA சதுப்பு நில முகாமையாளர்களுக்கான தகவல்கள் பரிமாற்ற பயிற்சி நிகழ்ச்சி. | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்), வன உத்தியோகத்தர் iii /02 பங்குபற்றுநர்கள் | தென்கொரியா | 5 நாட்கள் |
| 02 | ஆய்வுச் சுற்றுலா | பிரதிப் பணிப்பாளர் (பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம்), உதவிப் பணிப்பாளர் (NWTC), உதவிப் பணிப்பாளர் (யானைப் பாதுகப்பு), வன உதவியாளர்-21/24 பங்குபற்றுநர்கள் | இந்தியா | 12 நாட்கள் |

## 5.5. விரிவாக்கம், கல்வி மற்றும் பொருட்கோடல்

தனியாக முயற்சித்தால் பாதுகாப்பு என்பது வெற்றிபெறாது. இதற்கு மக்களின் ஆதரவும் போதுமான அங்கீகாரமும் தேவை. ஆகையால், பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள எந்தவொரு பாதுகாப்பு முயற்சியினையும் ஊக்கப்படுத்துவதற்கு முறையாக அறிவிக்கப்பட்ட மக்கள் அவசியமாகின்றனர்.

பாடசாலை சிறுவர், கிராமத்தவர், பொது அலுவலர்கள் போன்ற இலக்கு குழுக்களுக்கு நடாத்தப்பட்ட விரிவாக்கம் கல்வி மற்றும் விளக்கம் கூறலின் விபரம் அட்டவணை 5.7 இல் குறிப்பிடப்படுகின்றது.

**அட்டவணை 5.7:** 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும்

| தொ இல. | செயற்பாடு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000) |
|---|---|---|---|
| 1 | உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | 04 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. (ஊவா 01, மேற்கு 01, வட மேற்கு 01, கிழக்கு 01) | 154 |
| 2 | உயிர்ப் பல்வகைமை தினத்தை முன்னிட்டு அறிவூட்டல் நிகழ்ச்சிகள் - மகாவலி மற்றும் மத்திய பிராந்தியங்கள் | 07 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. (ஊவா-01, மேற்கு 01, வட மேற்கு 01, கிழக்கு 01, தெற்கு 01, கிழக்கு 01, பொலனறுவை 01) | 241 |
| 3 | சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட அறிவூட்டல் நிகழ்ச்சிகள் | 04 நிகழ்ச்சிகள் நடாத்தப்படடன. (மத்திய 01, தென் 01, மகாவலி 01, மேற்கு 01, கிழக்கு 01) | 172 |
| 4 | பொசன் விழாவின் போது மிஹந்தலை, சிதுல் பவ்வ ஆகிய இடங்களில் விசேட அறிவூட்டல்களை நடாத்துதல் | 01 நிகழ்ச்சி (ஊவா) நடாத்தப்பட்டது | 111 |
| 5 | எசல விழாவின் போது விசேட அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல் | 01 நிகழ்ச்சி (ஊவா) நடாத்தப்பட்டது | 87 |
| 6 | பாடசாலை மாணவர்களுக்கான வனசீவராசிகள் பாதுகாப்புகள் தொடர்பான கருத்தரங்கு – 07 வனசீவராசிகள் பிரதிப் பணிப்பாளர் பிராந்தியங்கள் ஒவ்வொன்றிற்கும் 10 நிகழ்ச்சிகள் | 01 நிகழ்ச்சி நடாத்தப்பட்டது பிரதிப் பணிப்பாளர் (மத்திய) - 10, பிரதிப் பணிப்பாளர் (மேற்கு) - 10 பிரதிப் பணிப்பாளர் (ஊவா) - 10, பிரதிப் பணிப்பாளர் (தெற்கு) -10, பிரதிப் பணிப்பாளர் (கிழக்கு) -10, பிரதிப் பணிப்பாளர் (அநுராதபுரம்) -10, பிரதிப் பணிப்பாளர் (பொலனறுவை) - 10. | 439 |
| 7 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் - அனைத்துப் பிராந்தியங்களிலும், ஒவ்வொரு | பி.ப (மத்திய) 01, பி.ப (மேல்) 02, பி.ப (ஊவா) 02, பி.ப ( தென்) 02, பி.ப (கிழக்கு) 02, பி.ப | 302 |

| | | | |
|---|---|---|---|
| | பிராந்தியத்திலும் தலா 2 நிகழ்ச்சிகள் | (அநுராதபுரம்) 01, பி.ப (பொலனறுவை) 02 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன | |
| 8 | வேண்டுகோளின் பேரில் அறிவூட்டல் நிகழ்ச்சிகள், விசேட கருத்தரங்குகள், செயலமர்வுகள், கண்காட்சிகள் நடாத்துதல் | 11 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. பிரதிப் பணிப்பாளர் (மத்திய) 01, பிரதிப் பணிப்பாளர் (மேற்கு) 02, பிரதிப் பணிப்பாளர்(யால/புந்தல) 01, பிரதிப் பணிப்பாளர் (கிழக்கு) 02, பிரதிப் பணிப்பாளர் (வட/மேற்கு) 04, பிரதிப் பணிப்பாளர் (மகாவலி) 01 | 163 |
| 9 | குமண மற்றும் கல்லோயாவுக்கான உரைமொழிபெயர்ப்பு ஆவணங்களைத் தயாரித்தல் | பூர்த்தி செய்யப்பட்டது | 176 |
| 10 | விளம்பரம் | 38 ஊடகவியலாளர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சியொன்று நடாத்தப்பட்டது. | 76 |
| 11 | கல்விசார் சுவரொட்டிகள், கையேடுகள் அச்சிடுதல் | மின்கள் தொடர்பான 5,000 பிரதி சுவரொட்டிகள் அச்சிடுதல் | |
| 12 | கல்விசார் ஆவணப்படம் தயாரித்தல் | | |
| 13 | வேறு விசேட நிகழ்வுகள் | • 01 கண்காட்சி நடாத்தப்பட்டது • கொவிஜன உதான செய்தித் தாள் அச்சிடப்பட்டது • அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சி (கதிர்காமம் வனப் பிராந்தியம்) - 01<br><br>• பாடசாலை மாணவர்களுகாக (அநுராதபுரம்) - 02<br><br>பிரதிப் பணிப்பாளர் (தெற்கு) - அறிவூட்டல் நிகழ்ச்சி முதலைகள் தொடர்பான 02 நிகழ்ச்சிகள்<br><br>மேற்கு 01 நிகழ்ச்சி<br><br>• பிரதிப் பணிப்பாளர் (கிழக்கு) 01 நிகழ்ச்சி, உரைமொழிபெயர்ப்பு பாடப்பொருள் குமண/கல்லோயா • 04 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் | 870 |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வனவு செய்ய்ப்பபட்டன.<br><br>வனசீவராசிகள் சஞ்சிகையின் 2,500 பிரதிகள் அச்சிடப்பபட்டன.<br><br>2012 தேசத்துக்கு மகுடம் நிகழ்ச்சிக்காக 20,000 கையேடுகள் அச்சிடப்பபட்டன. | |
| | நானாவிதங்கள் | | |
| 14 | "வனான்தரே கதந்தரே" வானொலி நிகழ்ச்சிக்கான  கொடுப்பனவுகள் | செலுத்தப்பபடடது. | 383 |
| 15 | மின்னேரிய தே.பூங்காவிலுள்ள சிறுத்தைப் பார்வைக் கூடடத்திற்கான கண்ணாடித் திரை தயாரித்தல் | பூர்த்தி செய்யப்பபட்டது | 16 |
| மொத்தம் | | | **3,190** |

## 5.6. திணைக்களத்தின் வெளியீடுகள்

2012 ஆம் ஆண்டில் பின்வரும் வெளியீடுகள் (அட்டவணை 5.8) வெளியிடப்பபட்டன. சுவரொட்டிகள் பூங்கா அலுவலகத்தில் விற்பனைக்கு கிடைக்கச் செய்யப்பபட்டன. வேறு வெளியீடுகள் உரிய அலுவலகங்களுக்கும் அலுவலர்களுக்கும் வினியோகிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.8:** 2012 ஆம் ஆண்டின் வெளியீடுகள்

| **வெளியீடுகள்** | **பிரதிகளின் எண்ணிக்கை** | **செலவினம்** (ரூபா. '000') |
|---|---|---|
| வனசீவராசிகள்  தொடர்பான வருடாந்த சஞ்சிகை | 2,500 | 305 |
| "வனதிவி சம்பத் ரெககனீமட" கையேடுகள் | 20,000 | 85 |
| "வனாந்தரே  கதந்தரே ' வானொலி நிகழ்ச்சி | 4 | 140 |
| வீடியோ ஆவண நிகழ்ச்சித் திட்டம் | 4 | 14 |
| "கொவிஜன உதானய" செய்தித் தாள் | 10 இதழ்கள் | 47 |
| வனசீவராசிகள் நேர அட்டவணை | 10,000 | 69 |
| **மொத்தச் செலவினம்** | | **660** |

## 5.7 ஏனைய செயற்பாடுகள்

- ***சர்வதேச சமவாயங்கள்***

இலங்கை கையெழுத்திட்ட பின்வரும் சர்வதேச சமவாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

1. CITES (காட்டு தாவர விலங்கின அருகிவரும் உயிரினங்கின் சர்வதேச வியாபாரம் மீதான சமவாயம்) இது அரசாங்கங்களுக்கிடையேயான சர்வதேச உடன்படிக்கையொன்றாகும். இதன் நோக்கம் காட்டு மிருகங்கள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வியாபாரம் அவற்றின் உயிர்வாழ்வினை அச்சுறுத்தாது இருப்பதனை உறுதிப்படுத்துவதாகும்.

**அட்டவணை 5.9:** வழங்கப்பட்ட CITES உரிமங்களின் எண்ணிக்கை (2007-2012)

| **வருடம்** | **வழங்கப்பட்ட உரிமங்களின் எண்.** | **வருமானம் (ரூபா. '000')** |
|---|---|---|
| 2007 | 768 | 384.0 |
| 2008 | 781 | 390.5 |
| 2009 | 764 | 382.0 |
| 2010 | 685 | 342.5 |
| 2011 | 596 | 522.0 |
| 2012 | 722 | 491.8 |

2. இடம்பெயர் காட்டுமிருக உயிரினங்களின் பாதுகாப்பின் தொடர்பான சமவாயங்கள் (CMS அல்லது Bonn என அறியப்படும் சமவாயம்) இதன் நோக்கம் நில, கடல், ஆகாய இடம்பெயர் உயிரினங்களை அவற்றின் வனப் பிரதேசங்களில் முழுவதிலும் பாதுகாத்தல்.

3. ஈரநிலங்கள் மீதான சமவாயம் (ரம்சார், ஈரான் 1971) இது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தமது ஈரநிலங்களின் சூழல் தன்மையை பேணுவதற்கும் தமது ஆள்புலங்களிலுள்ள எல்லா ஈரநிலங்களினதும் முன்யோசனையான பாவனை, நிலைபேறான பாவனை என்பவற்றினை திட்டமிடுவதற்கும் அதன் உறுப்பு நாடுகளின் பொறுப்பை உள்ளடக்கிய அரசாங்கத்திற்கிடையேயான உடன்படிக்கையொன்றாகும்.

இலங்கையில் சர்வதேச சமவாயங்களின் நடைமுறைப்படுத்தல் மீதான முனைப்பான பங்குபற்றலின் முக்கியத்துவத்தினை விளங்கிக்கொண்டு வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் இயைபான கூட்டங்கள், கருத்துக் கணிப்பு மற்றும் பயிற்சி பட்டறைகளில் பங்குபற்றுவதற்கு அதன் பிரதிநிதிகளை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அலுவலர்கள் பின்வரும் சர்வதேச கூட்டங்களிலும் வேலைக் களங்களிலும் பங்குபற்றியுள்ளன.

**அட்டவணை 5.10:** 2012 ஆம் ஆண்டில் வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்கள பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சர்வதேச கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள்

| **தொ. இல** | **செயலமர்வு மற்றும் கூட்டம்** | **பங்குபற்றுநர்கள்** | **நாடு** | **காலப்பகுதி (நாட்கள்)** |
|---|---|---|---|---|
| 01 | ஜப்பானிய மிருகக் காட்சி சாலையில் யானைப் பராமரிப்பிற்கான பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல் | பிரதிப் பணிப்பாளர் (வனசீவராசிகள் சுகாதாரம்) | ஜப்பான் | 8 நாட்கள் |
| 02 | டாமா மிருகக் காட்சி சாலையில் யானைப் பராமரிப்பிற்கான பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல் | பிரதிப் பணிப்பாளர் (வனசீவராசிகள் சுகாதாரம்) | ஜப்பான் | 8 நாட்கள் |
| 03 | பிராந்தியய ஆசிய யானை மிருக வைத்தியச் செயலமர்வு | பிரதிப் பணிப்பாளர் (வனசீவராசிகள் சுகாதாரம்) | இந்தோ னேசியா | 5 நாட்கள் |
| 04 | றம்சார் சமவாயத்தின் அமுலாக்கத்திற்கான விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப தொடர்பான பிராந்திய செயலமர்வு | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) | தென் கொரியா | 3 நாட்கள் |
| 05 | ஆசிய மருத்துவ மூலிகைச் செடிகள் தொடர்பான ஆற்றல் விருத்திக்கான செயலமர்வு | உதவிப் பணிப்பாளர் (ஆய்வு மற்றும் பயிற்சி) | பூட்டான் | 3 நாட்கள் |
| 06 | பாரிய இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கப்பலிலிருந்து பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் முகாமை வினைத்திறனை மேம்படுத்துதல் | உதவிப் பணிப்பாளர் (வட மேற்கு) | தாய்லாந் து | 4 நாட்கள் |
| 07 | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான இயற்கை ஒதுக்கங்களின் முகாமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு | உதவிப் பணிப்பாளர் (இயற்கை வளங்கள்) | சீனா | 29 நாட்கள் |
| 08 | ஸூனூஸ் தடுப்பு மற்றும் வழிமுறைக் கட்டுப்பாடு தொடர்பான பல்துறைசார் ஒத்துழைப்பு தொடர்பான 3 வது பிராந்திய செயலமர்வு | மிருக வைத்தியர் | இந்தோ னேசியா | 2 நாட்கள் |
| 09 | உயர் பெதொஜெனிக் பறவைக் காய்ச்சல் | மிருக வைத்தியர் | நேபாளம் | 2 நாட்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | பிராஹா மிருகக் காட்சிசாலையில் யானை பராமரிப்புக்கான பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல் | மிருக வைத்தியர் | செக் குடியரசு | 9 நாட்கள் |
| 11 | தெஹ்ரான் மிருகக் காட்சிசாலையில் யானைப் பராமரிப்புக்கான பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல் | மிருக வைத்தியர் | ஈரான் | 04 நாட்கள் |
| 12 | IUCN உலக வனப்பாதுகாப்பு மாநாடு | கல்வி மற்றும் பயிற்சி உத்தியோகத்தர் | தென் கொரியா | 14 நாட்கள் |
| 13 | சதுப்பு நிலத் தாவரம் தொடர்பான பிராந்திய செயலமர்வு | வனப் பாதுகாவலர் 1 | இந்தியா | 5 நாட்கள் |
| 14 | BOBLME – SEAFDEC – FAQ பிராந்திய செயலமர்பு மற்றும் BOBLME MPA செயற்குழுக் கூட்டம் | வனப் பாதுகாப்பு உதவியாளர் | தாய்லாந்து | 4 நாட்கள் |

### 5.8. தயட்ட கிருள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின்வேலி நிர்மாணம்

**அட்டவணை 5.11:** தயட்ட கிருள பயிற்சி நிகழ்ச்சித்திட்ட தலைப்பு **-** 2012

| தொ இல. | பயிற்சி நிகழ்ச்சித்திட்ட தலைப்பு | பௌதிக முன்னேற்றம் | நிதியியல் முன்னேற்றம். ரூபா ('000) |
|---|---|---|---|
| 1 | மின்வேலியமைத்தல் (ஹுணுவில-போகொட-மல்வதுஓயா) | 01 வலுவூட்டல் கூடாரங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 39.5 கிமீ நீளமான வேலி நடப்பட்டுள்ளது. | 32,374 |

**அத்தியாயம் - 6**

# பாரவையாளர் சேவைகள், சூழல் சுற்றுலா மற்றும் சமூக இணைப்புப் பிரிவு

## 6.1. பிரதான செயற்பாடுகளும் பொறுப்புக்களும்

- பார்வை சேவைத் திட்டயும் வரவு செலவுத் திட்டங்களையும் தயாரித்தல்
- பார்வை நிலைய கண்காட்சிப் பொருட்களையும் காட்சிப் பொருட்களையும் தயாரித்தல்
- புதிய சுற்றுலாப் பொதிகளை அறிமுகம் செய்தல்
- சுற்றுலாத் துறைச் செயற்பாடுகளை பல்வகைமைப்படுத்தல்
- VSE செயற்பாடுகளை ஊக்குவித்தலும் சந்தைப்படுத்தலும்
- பாதுக்கப்பட்ட பிரதேசங்களின் உள்ளேயும் வெளியேயும் தகவல் நிலையங்களை உருவாக்குதல்
- பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் மீது தங்கியிருக்கும் நிலையைக் குறைப்பதற்காக சமூக வலுவூட்டல் ஊடாகப் பாதுகாப்புச் செயன்முறையில் சமூகங்களின் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல்
- கல்வி மற்று விரிவாக்கல் நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் பொது மக்கள் மத்தியில் வனப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

### 6.1.1. செயலாற்றுகை விபரம்

#### 6.1.1.1. பார்வைகளும் வருமானமும்

- வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களமானது தனது வருமானத்தில் பெரும் பகுதியை தேசிய வனசீவராசிகள் பூங்காக்களில் சேவைகளை வழங்குவதன் மூலம் உழைக்கின்றது. பார்வையாளர்களுக்கான சேவைகள் மூலம் 2012 ஆண்டில் உழைத்த வருமானம் ரூபா 701,059,366.74 (அட்டவணை 6.1).

**அட்டவணை 6.1:** பார்வையாளர் சேவை மூலம் கிடைந்த வருடாந்த வருமானம்

| தொ.இல | அமைவிடம் | வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 01 | உடவளவை ETH | 69,52,355.00 |
| 02 | யால-பலாதபுர | 34,25,85,737.12 |
| 03 | யால- கதிர்காமம் | 77,84,823.54 |
| 04 | யால- கால்கே | 94,818.72 |
| 05 | பூந்தல | 95,74,461.03 |
| 06 | ஹோட்டன் சமவெளி | 12,12,42,329.26 |
| 07 | உடவளவை | 6,96,19,071.71 |
| 08 | வில்பத்து | 2,59,03,702.36 |

| | | |
|---|---|---|
| 09 | வஸ்கமுவை | 61,38,549.71 |
| 10. | மின்னேரியா | 6,55,52,337.79 |
| 11 | லுணுகம்வெஹர -தனமல்வில | 22,61,342.98 |
| 12 | லுணுகம்வெஹர - கால்கே | 1,50,796.80 |
| 13 | லுணுகம்வெஹர - கரவில | 45,627.98 |
| 14 | கவுடுல்ல | 18,041,018.80 |
| 15 | ஹொரகொல்லை | 2,73,745.52 |
| 16 | மாதுறுஓயா | 2,73,794.24 |
| 17 | குமண | 62,82,484.16 |
| 18 | கல்லோயா | 15,63,081.52 |
| 19 | கல்லோயாநில்கல நுழைவாயில் | 70,296.80 |
| 20 | அம்பாறை - இக்கல்ஓயா பங்களா | 1,36,080.00 |
| 21 | அங்கம்மெடில்ல | 3,13,895.28 |
| 22 | கல்வே நிலம் | 1,81,852.00 |
| 23 | கிறித்தலை | 2,87,710.00 |
| 24 | மதுனகல பீட் அலுவலகம் | 0.00 |
| 25 | லாஹுகலை | 1,74,232.96 |
| 26 | புறாத் தீவு | 1,50,35,986.88 |
| 27 | ஹிக்கடுவ | 4,06,012.50 |
| 28 | ரித்திகல | 4840.09 |
| 29 | மிஹந்தலை (ஊழியர் விடுதி) | 20,328.00 |
| 30 | கதிர்காமம் (ஊழியர் விடுதி) | 64,988.00 |
| 31 | நல்லதண்ணிய | 23,066.00 |
| | **வருமானம்** | **701,059,366.74** |

**உரு** 6.1**:** பார்வையாளருக்கான சேவைகள் மூலமான வருடாந்த வருமானம் (2004-2012)



**அட்டவணை 6.2:** பார்வையாளர் வருகை தொடர்பான சுருக்காமான விபரம் 2012

| **தேசிய பூங்கா** | **பார்வைகள்** | | |
|---|---|---|---|
| | **உள்நாட்டு** | **வெளிநாட்டு** | **மொத்தப் பார்வையாளர்கள்** |
| யால | 2,17,898 | 1,21,735 | 3,39,633 |
| ஹோர்ட்டன் சமவெளி | 1,84,744 | 39,123 | 2,23,867 |
| உடவளவை | 52,995 | 23,082 | 76,077 |
| வஸ்கமுவை | 22,891 | 812 | 23,703 |
| மின்னேரியா | 37,833 | 25,020 | 62,853 |
| பூந்தல | 6,397 | 4,853 | 11,250 |
| ஹொரகொல்லை | 6,637 | 2 | 6,639 |
| கவுடுல்ல | 8,930 | 6,443 | 15,373 |
| லுணுகம்வெகர | 3,115 | 48 | 3,163 |
| கல்லோயா | 2,523 | 332 | 2,855 |
| குமண | 18,644 | 1,958 | 20,602 |
| அங்கம்மெடில்ல | 1,536 | 0 | 1,536 |
| கல்வே நிலம் | 1,521 | 82 | 1,603 |
| வில்பத்து | 29,689 | 5,417 | 35,106 |
| மாதுறுஒயா | 716 | 21 | 737 |
| லாஹுகலை | 314 | 110 | 424 |
| புறாத் தீவு | 36,646 | 8,437 | 45,083 |
| ஹிக்கடுவ | 40,506 | 7,050 | 47,556 |
| ETH | 106,176 | 9,527 | 115,703 |
| **மொத்தம்.** | **779,711** | **254,052** | **1,033,763** |




**உரு 6.2:** பார்வையாளர் வகைப் பரம்பல் 2012




**உரு 6.3:** வருடாந்த பார்வையாளர் பரம்பல் 2012




**6.4:** வருடாந்த வேறுபாடுகள் 1995 -2012

### **6.1.1.2.** தொண்டர் வழிகாட்டிகள்

வனசீவராசிகள் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு அண்மித்த கிராமங்களில் வாழும் படித்த இளைஞர்களை தேசிய பூங்காக்களில் தன்னார்வை வழிகாட்டிகளாகச் சேர்த்துக் கொள்கின்றது. இத்தன்னார் வழிகாட்டில் தேசிய பூங்காக்களில் உரைமொழிபெயர்ப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்றனர். 2008 முதல் 2012 வரை பார்வையாளர் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட தன்னார்வ வழிகாட்டிகளில் எண்ணிக்கைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை **6.3** தன்னார்வ வழிகாட்டிகளின்

| **வருடம்** | **தன்னார்வ வழிகாட்டிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 2007 | 197 |
| 2008 | 189 |
| 2009 | 266 |
| 2010 | 255 |
| 2011 | 287 |
| 2012 | 323 |

**அட்டவணை 6.4:** 2012 ஆம் ஆண்டில் சூழல் சுற்றுலாத் துறைச் செயற்பாடுகள்

| **தொ. இல.** | **செயற்பாடு** | **பௌதிக முன்னேற்றம்** | **நிதியியல் முன்னேற்றம். ரூபா** ('000) |
|---|---|---|---|
| 1 | கவுடுல்ல தேசிய பூங்கா-தொரதெக எல மற்றும் சுதுகல ஆகிய இடங்களில் 02 முகாம்களை அமைத்தல் | 01 முகாம் அமைக்கப்பட்டது. | 270 |
| 2 | தங்கமலை சரணாலயத்தில் குப்பைத் தொட்டிகளின் நிர்மாணம் | 100% பூர்த்தி | 107 |
| 3 | ரிற்றீகலவில் உள்ள தகவல் ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைத்தல் | பூர்த்தியடைந்துள்ளது. நிறப்பூச்சும் பூசம் பணியும் நுழைவுச் சீட்டு கவுண்டர் நிர்மாணமும் நடைபெறுகின்றன | 785 |
| 4 | உஸ்ஸன்கொடை தேசிய பூங்காவில் தகவல் நிலையம் மற்றும் நுழைவுச் சீட்டு கவுண்டர் நிர்மாணம் | தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறும் வரை பிற்போடப்பட்டுள்ளது | |
| 5 | எக்கல்ஒயா வனசீவராசிகள் பங்களாவை புனரமைத்தல் | 100% பூர்த்தி | 1,394 |
| 6 | கல்லோயா தேசிய பூங்காவில் சேனாநாயக சமுத்திரதில் படகுத் துறை நிர்மாணம் | பூர்த்தியடைந்துள்ளது. | 96 |
| 7 | குமண வில்லு, குமண தேசிய பூங்கா ஆகிய இடங்களில் பார்வையாளர் கூடம் அமைத்தல் | 70% பூர்த்தி | 280 |

| | | | |
|---|---|---|---|
| 8 | வனசீவராசிகள் பங்களாவுக்கான அணை வீட்டு கட்டடம் நிர்மாணம் | பூர்த்தியடைந்துள்ளது. | 755 |
| 9 | கல்லோயா தேசிய பூங்காவில் கொஸ்பொல முகாம் புனரமைத்தல் | 100% பூர்த்தி | 277 |
| 10 | லுணுகம்வெஹர தே.பூங்காவில் 02 முகாம்களை நிர்மானித்தல் | 100% பூர்த்தி | 435 |
| 11 | புந்தல தேசிய பூங்காவின் கேட்போர் கூடத்தை வயர் பின்னலினால் மறைத்தல் | பூர்த்தியடையவில்லை | |
| 12 | உரைமொழிபெயர்ப்புப் பொருட்கள் | நுழைவுச் சீட்டுக்களை அச்சிடுதல் (1350) ஹிககடுவை தேசிய பூங்கா, குமண தே.பூ | 226 |
| 13 | யால தேசிய பூங்காவில் பூட்டாவ வனசீவராசிகள் பங்களாவில் மர நடுகை நிகழ்ச்சியும் சூரிய சக்தி தொகுதியை நிறுவுதலும் | பூர்த்தியடைந்துள்ளது. | 40 |
| 14 | ஹிக்கடுவை பார்வையாளர் நிலையம், அலுவலகக் கட்டடத் தொகுதி என்வற்றின் நிர்மாணத்திற்கான கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் விண்ணப்பக் கட்டணங்கள் | பூர்த்தியடைந்துள்ளது. | 2 |
| 15 | யால தேசிய பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ரவி சமரசிங்ஹ ஞாபகார்த்த நிலையத்தின் திறப்பு விழா | பூர்த்தியடைந்துள்ளது. | 53 |
| 16 | யால தேசிய பூங்காவில் பழைய பட்டுவவில் சூரிய சக்தி முறையின் அங்குரார்ப்பன வைபவமும் உடவளவை தே.பூங்காவில் மரநடு நிகழ்ச்சியின் ஆரம்பமும் | பூர்த்தியடைந்துள்ளது. | 24 |
| 17 | சோமவதிய, யால, அங்கமெடில்ல தேசிய பூங்காக்களுக்கான அமைச்சரின் கள விஜயம் | பூர்த்தியடைந்துள்ளது. | 53 |
| 18 | சுற்றுலா விடுதி நில அளவை | 71% பூர்த்தி | 17 |
| 19 | வில்பத்து, யால தேசிய பூங்காக்களின் தன்னார்வ வழிகாட்டிகளின் திறன் விருத்தி | 2 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. | 129 |
| 20 | வில்பத்து தேசிய பூங்காவின் விலாச்சிய மற்றும் தந்திரிமலை நுழைவாயில்களுக்கான 2 ஞாபகார்த்தப் பலகைகள் தயாரித்தல் | பூர்த்தியடைந்துள்ளது. | 144 |
| 21 | வில்பத்து தேசிய பூங்காவின் நிர்மாணம் தொடர்பாக பவர்ஸ் அன்ட் கம்பனியின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடாததுதல். | | 8 |

| | | | |
|---|---|---|---|
| 22 | வஸ்கமுவை வனசீவராசிகள் பங்களாக்களில் உள்ள தளபாடங்களைத் திருத்துதல் | பூர்த்தியடைந்துள்ளது. | 31 |
| 23 | மனவில பங்களாக்களின் மலசலகூடங்களைத் திருத்துதல் | பூர்த்தியடைந்துள்ளது. | 5 |
| 24 | உடவளவை தேசிய பூங்கா, திம்பிரியமன்கட வனசீவராசிகள் பங்களாவைப் புதுப்பித்தல் | நடைபெறுகின்றது (30 பூர்த்தியடைந்துள்ளது) | 215 |
| 25 | மாதுறுஒயா தேசிய பூங்காவில், எடெரட்டமுல்ல வனசீவராசிகள் பங்களாவிற்கு நீ வழங்கல் தொகுதியைப் புனரமைத்தல் | டீப் வெல் தொகுதி கொள்வனவு செய்ய்ப்பட்டது. | 17 |
| 26 | யால தேசிய பூங்காவில் பழைய புத்தாவ மற்றும் ஒன்டுச்சி வனசீவராசிகள் பங்களாக்களைப் புதுப்பித்தல். | தன்னார்வ அடிப்படையில் CBயினைச் சுத்தம் செய்தல் | 141 |
| 27 | குமண தேசிய பூங்காவில் ஆமைகள் பாதுகாப்புச் செயற்திட்டத்திற்கான உரைபெயர்ப்பு பாடப்பொருட்களைத் தயாரித்தல் | நிதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. | 105 |
| 28 | மின்னேரிய தேசிய பூங்காவில் காட்சிப் பொருட்களுக்கான கண்ணாடித் திரைகள் தயாரித்தல் | 100% பூர்த்தி | 16 |
| 29 | ரிட்டிகல ETH ஆரம்பித்தல் | 1 பலகை தயாரிக்கப்பட்டது | 91 |
| 30 | குமண தேசிய பூங்காவில் பார்வையாளர் நிலையத்தையும் நலன்புரிச் சிற்றுண்டிச் சாலையையும் புனரமைத்தல் | 100% பூர்த்தி | 280 |
| 31 | விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 01ஊடக பணிமனை (தொண்டர் பணியாளர்கள்) | 117 |
| 32 | கவுடுல்ல தேசிய பூங்காவில் மணிக்சொரவ்வ CB சூரிய சக்தி முறையைப் புனரமைத்தல் | பூர்த்தியடைந்துள்ளது. | 27 |
| | **உப மொத்தம்** | | **6,140** |

## 6.2. சமூக அனுகல் அலகு

### 6.2.1 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

சமூக வலுவூட்டலின் ஊடாக வனப் பாதுகாப்புப் செயன்முறையில் சமூகங்களைப் பங்கேற்கச் செய்வதற்காக இப்பிரிவின் அதிகாரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய தரவுகளும் தகவல்களும் அட்டவணை 6.6 இல் காட்டப்பட்டுள்ளன.

சமூக அனுகவல் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்

HSBCயின் உதவியுடன் பின்வரும் வேலை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் சுத்தம் செய்யும் செயற்திட்டம்

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தனியார் துறையின் உதவியுடனான முதலாவது செயற்திட்டமான HSBC நிதியுதவியுடனான சுத்தீகரிப்புச் செயற்திட்டம 1999 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.இச்செயற்திட்டம் முதலில் ஹோர்ட்டன் தேசிய பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டது. பொலிதீன் உக்காமையின் காரணமாக ஏற்படக்கூடிய மான்களின் மரணங்களைக் குறைப்பதற்காக வினைத்திறன்மிக்க குப்பை அகற்றல் செயன்முறையொன்றை உருவாக்குவதன் மூலம் ஹோர்ட்டன் சமவெளியின் அழகைப் பாதுகாப்பதே இச்செயற்திட்டத்தை 1999 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும் போது பிரதான குறிக்கோளாகக் காணப்பட்டது.

ஹோர்ட்டன் சமவெளியை குப்பைகளும் பொலிதீனுமற்ற ஒரு சூழற்தொகுதியாகப் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் இச்செயற்திட்டம் 2012 வரை நீடிக்கப்பட்டது.

இச்செயற்திட்டத்தின் கீழ் பூங்காவில் சுத்தீகரிப்பு வேலைகளில் ஈடுபடுவதற்காக அருகிலுள்ள டயகம தோட்டத்திலிருந்து 06 தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கான சம்பளங்கள் வருடம் முழுவதிலும் இச்செயற்திட்டத்திலிருந்து செலுத்தப்பட்டன.

இப்பூங்காவிற்கு வருகை தரும் உலலாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால், பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக பார்வையாளர் நிலையத்தில் இரண்டு உரைமொழிபெயர்ப்பாளர்கள் தொடர்ச்சியாக 8 வருடங்களாகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சம்பளமும் இச்செயற்திட்டதத்தின் மூலமே செலுத்தப்பட்டன.

குப்பைகளை தேசிய பூங்காவிற்கு வெளியே கொண்டு செல்வதற்காகவும், சுத்தீகரிப்புச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும், (HSBC யினால் வழங்கப்பட்ட) கை ட்ரக்டர் மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகள் பூங்காக் காப்பாளருக்குச் செலுத்தப்பட்டன.

இச்செயற்திட்டத்தின் கீழ், உலக முடிவு - பேக்கர்ஸ் செங்குத்து வீதி நடைபாதை நெடுகிலும் அறிவூட்டும் பதாதைககள் நடப்பட்டதுடன் சேதமடைந்த பதாகைகளுக்குப் பதிலாக புதிதாகப் பதாகைகள் பொருத்தப்பட்டன.

**ஹோர்ட்டன் சமவெளியின் அதிர்வுப் பிரதேச மீள்காடாக்கச் செயற்திட்டம்**

நீரேந்துப் பிரதேச மீள்காடாக்கச் செயற்திட்ம் 2012 ஆம் ஆண்டில் HSBC யின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இச்செயற்திட்டத்தின் குறிக்கோள்,ஹோர்ட்டன் சமவெளி தேசிய பூங்காவின் அதிர்வுப் பிரதேசத்திலுள்ள கைவிடப்பட்ட நீரேந்துப் பிரதேசங்களில் மீள்காடாக்கம் செய்வதாகும். இச்செயற்திட்டமானது,தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் அங்கத்தவர்கள், ஹோர்ட்டன் சமவெளியைச் சூழவுள்ள தேயிலைத் தோட்டங்களின் முகாமையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய உள்நாட்டு சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றுடனான கூட்டுச் செயற்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்செயற்திட்டத்தின் முன்னோடிப் பரிசோதனைக்காக சம்மர்ரெஸ்ட் தேயிலைத் தோட்டத்திலுள்ள சுமார் 1.5 ஹெக்டயர் நீர்தேங்கும் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டு 1500 உள்நாட்டுப் பழமரங்களும் காட்டு மரங்களும் 2012 ஆம் ஆண்டில் மழை ஆரம்பித்தவுடன் நடப்பட்டன.

களை அகற்றல், இறக்கும் கன்றுகளுக்குப் பதிலாக புதிதாகக் கன்றுகளை நடுதல், கன்றுகளின் வளர்ச்சியைக் கண்காணித்தல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீள்காடாக்கச் செயற்திட்டத்திற்கு முன்னர் பிரதிப் பணிப்பாளர்(மத்திய பிராந்தியம்) பூங்கா காப்பாளர் (ஹொர்ட்டன் சமவெளி) ஆகியோரின் பங்கேற்புடன் சம்மர்ரெஸ்ட் தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான அனுகல் நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது.

**பீக் வைல்டர்நெஸ் இயற்கை ஒதுக்கிற்கான சுத்தீகரிப்புச் செயற்திட்டம்**

ஹோர்ட்டன் சமவெளியைப் போன்று பீக் வைல்டர்நெஸ்ஸிலும் சுத்திகரிப்புச் செயற்திட்டத்திற்கு HSBC அனுசரணை வழங்கியது. இச்செயற்திட்டம் 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2012 இலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

இச்செயற்திட்டத்தின் கீழ் குப்பைகளைச் (குறிப்பாக பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக்) சேகரிப்பதற்காக 4தொழிலாளர்கள் (பலபட்டல பகுதி 2 தொழிலாளர்களும் நல்லதண்ணிய பகுதியில் 2 தொழிலாளர்களுமாக) வேலைக்கமர்த்தப்பட்டனர் இவர்களுக்கான சம்பளங்கள் இச்செயற்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டன.

ஒதுக்கத்திலிருந்து குப்பைகளை அகற்றுவதற்காக பூங்கா காப்பாளருக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டது.

யாத்திரிகர்கள் செல்லும் பாதைகள் நிலையான குப்பைத் தொட்டிகள் காணப்படாமையினால் பொலிதீன்களும் குப்பைகளும் எல்லா இடங்களிலும் சிதறிக் காணப்படுவது

அவதானிக்கப்பட்டது. அதனால் குப்பை சேகரிப்புச் செயன்முறையின் போது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததுடன் வனசீவராசிகளும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்குகின்றன.

அதனால், முதற்கட்டமாக நல்லதண்ணிய யாத்திரிகை வீதியின் நெடுகிலும் நிலையான குப்பைத் தொட்டிகளை நிர்மாணிப்பதற்கு HSBC வங்கியின் உதவி பெறப்பட்டது. ஹோர்ட்டன் சமவெளியில் இதே வடிவமைப்பில் நிர்மாணிப்பதற்கான தொழிநுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளன. நல்லதண்ணிய வீதியில் 15 குப்பைத் தொட்டிகளை நிர்மாணிக்கும் வேலைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இப்பணிகள் 2013 இல் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

**HSBC ஊழியர் ஈடுபாட்டு நிகழ்ச்சி - பீக் வைல்டர்நெஸ்**

HSBC யின் வேண்டுகோளுக்கு இணங்க, அறிவூட்டல் மற்றும் ஊழியர்கள் ஈடுபாட்டு நிகழ்ச்சிகள் 2012.10.12 ஆந் திகதி பீக் வைல்டர்நெஸ்ஸிலுள்ள ஸ்ரீ பலபத்தலவில் நடாத்தப்பட்டன.

இந்நிகழ்வில் HSBC யின் சிரேஷ்ட முகாமை ஊழியர்கள் உள்ளிட்ட 50 ஊழியர்கள் பங்கேற்றனர் அண்மையில் உலக மரபுரிமைப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உயிர்ப் பல்வகைமை கொண்ட பீக் வைல்டர்நெஸ்ஸின் இயற்கை ஒதுக்கின் முக்கியத்தும் தொடர்பாக பூங்காவின் காப்பாளர் சமர்ப்பணம் ஒன்றை முன்வைத்தார்.

